பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 13 வெள்ளிக்கிழமை (27.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :182

# பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை இப்போதைக்கு இல்லவே இல்லை!

## அரசிடமிருந்து எந்த அசுமாத்தமும் காணோம் என்கின்றனர் புலிகள்

கிளிநொச்சி,மே27

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பை எப்பாடுபட்டேனும் விரைவில் உருவாக்குவேன் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூளுரைத்து வருகின்றபோதிலும் அத்தகைய கட்டமைப்பு ஒன்று விரைவில் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் ஏதும் தென்படவில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்தோ அரசிடமிருந்தோ தங்களுக்கு சமிக்ஞை கிடைக்கவில்லை என்றும், அது தொடர்பான அசுமாத்தத்தையோ காணவில்லை என்றும் புலிகளின் அரசியல் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

"பொதுக்கட்டமைப்பை விரைவில் ஏற்படுத்துவதாயின் அதற்கான முன் ஆயத்த ஏற்பாடுகள், ஒழுங்குமுறைகள் குறித்து எமக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆனால் அப்படியான அசுமாத்தம் ஏதும் ஜனாதிபதியிடமிருந்தோ, அரசிடமிருந்தோ தெரியவரவில்லை. அனைத்து விடயங்களும் கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிக் கிடக்கின்றன. ஜனாதிபதியின் வாய்வீச்சுப் பேச்சைத் தவிர" - என்று புலிகளின் அரசியல் பிரிவின் மூத்த உறுப்பினர் ஒருவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு சமாதான முயற்சிகளில் ஆக்கபூர்வமான நகர்வுகளை எடுக்கக்கூடிய வாய்ப்பு இந்தமாத இறுதியோடு அல்லது அடுத்த மாத

(16ஆம் பக்கம் பார்க்க)

## உளவுப் பிரிவினருக்கு வெளிநாட்டில் உயர்பதவி!

கொழும்பு.மே27

இலங்கைப் படைத்துறைகளின் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய பலர் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பாதுகாப்பு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் புலனாய்வுப் பிரிவில் சேவையாற்றி, உயிராபத்தை எதிர்நோக்கிய உத்தியோகத்தர்களே இவ்வாறான பதவிகளில் அமர்த்தப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய கப்டன் மஞ்சுள பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகவும், கப்டன் நீல் ரொசைரோ புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகவும், பிரிகேடியர் மகிந்த பீரிஸ் வாஷிங்ரனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகரா

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பதற்ற நிலை நேற்றும் தொடர்ந்து நீடிப்பு

திருகோணமலை.மே27

இனக்கருத்து முரண்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கும் திருகோணமலை நகரில் அமைதியுடன் கூடிய பதற்றநிலை தொடர்கிறது.

திடீரென முளைத்த புத்தர் சிலையால் எழுந்த நெருக்கடி தற்காலிகமாக ஒரு வாரத்துக்குத் தள்ளிப் போடப்பட்டாலும் அங்கு பதற்ற நிலையே தொடர்கின்றது.

நீதிமன்ற உத்தரவை மதித்து சம்பந்தப்பட்ட புத்தர் சிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. நகரில் குவிக்கப்பட்டுள்ள துருப்புகள் தொடர்ந்து நிலை கொண்டுள்ளனர். கொழும்பு உட்பட பிற மாவட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழ் அகதிகள் திரும்பிவருவதற்கு பாதுகாப்பான வழியை ஏற்படுத்துங்கள்!

### ஐ.நா.அகதிகள் தூதரகத்திடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

கிளிநொச்சி.மே27

இலங்கைப் படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளினால் புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தஞ்சமடைந்திருக்கும் ஈழத்தமிழர்கள் பாதுகாப்பான வழியில் தாயகம் திரும்புவதற்கு இலங்கை,இந்திய அரசுகளுடன் கலந்துரையாடி வழிசெய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.நா.அகதிகள் தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாகப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் ராஜீவ் கபூரையும் அவரது குழுவினரையும் நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சியில் சமாதானச் செயலகத்தில் சந்தித்த போதே தமிழ்ச்செல்வன் மேற்படி கோரிக்கையைவிடுத்தார்.

அகதிகளின் மீள்குடியமர்வுடன் தொடர்புபட்ட ஐ.நா.அகதிகள் தூதரகத்தின் சாசனப்படி, ஈழத்தமிழ் அகதிகள் நாடு திரும்புவதற்கு பாதுகாப்பான வழியை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக இந்தியாவுடன் தொடர்புபட்டுச் செயற்பட வேண்டிய கடப்பாடு தூதரகத்துக்கு உள்ளது. எனத் தமிழ்ச்செல்வன் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நீதிமன்ற உத்தரவை நிலைநிறுத்த ஜனாதிபதி விரைந்து ஆவன செய்யவேண்டும்

### தமிழ்மக்கள் பேரவை கடிதம்; ரணிலிடமும் கோரிக்கை

திருகோணமலை.மே27

திருகோணமலை பஸ் நிலையப் பகுதியில் அனுமதியின்றித் திடீரென அமைக்கப்பட்ட புத்தர் சிலையை நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய விரைந்து அகற்றுவன் மூலம் முன்னைய - வழமையான - நிலையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலையும் கோரியிருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாகப் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் நேற்று ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதங்களில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சட்டக் கட்டுப்பாடுகளை நிறைவு செய்யாமல் சிலை அமைக்கப்பட்ட சம்பவத்துக்கு முன்னர் திருகோணமலையில் நிலவிய வழமை நிலையை மீண்டும் அங்கு ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுப்பதற்காகப் பின்வரும் உண்மைகளைத் தங்களின் கவனத்துக்குக்கொண்டு வருகிறோம்.

இந்த முழு நிலைமைக்கும் காரணம் வேறு யாருமல்லர், திருகோணமலையில் ஜே.வி.பித் தூணாக இருப்பவர்தான். இந்த நபரின் கீழ், அவரது கட்சியைச் சேர்ந்தவரும், சீனக்குடா விஹாரையுடன் இணைக்கப்பட்டவருமான

(02ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி ராஜீவ் கபூரை கைலாகு கொடுத்து வரவேற்கிறார் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்.

## எம்.பி. பதவியைத் தக்கவைத்திருப்பதற்கு எஸ்.பி. தாக்கல் செய்த மனு தள்ளுபடி!

### நோட்டீஸ் அனுப்ப மறுத்து நிராகரித்தது மேன்முறையீட்டு நீதிமன்று

கொழும்பு.மே27

சிறையில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்கா, தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோவதற்கு எதிராகத் தாக்கல் செய்த மனுவை, சம்பந்தப்பட்ட மனு தொடர்பாக எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப மறுத்து தள்ளுபடி செய்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

இந்தத் தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான கே.ஸ்ரீபவன், நஞ்சன் சில்வா ஆகியோர் இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கினர்.

உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக எஸ்.பி.திஸநாயக்காவுக்கு உயர் நீதிமன்றம் இரண்டு ஆண்டுகாலச் சிறைத்தண்டனை விதித்தது. அவர் சிறைவாசம் அனுபவித்துவருகிறார்.

இந்தத் தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கி

(02ஆம் பக்கம் பார்க்க)

## புகைகக்கும் வாகனங்களின் அனுமதிப் பத்திரம் ரத்தாகும்!

### யாழ்.செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்.மே27

குடாநாட்டில் சுற்றுச் சூழலை மாசுபடுத்துகின்ற வகையில் புகையைக் கக்கியபடி செல்லுகின்ற வாகனங்களின் அனுமதிப்பத்திரம் ரத்துச்செய்யப்படும். அந்த வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவது முற்றாகத் தடைசெய்யப்படும்.

யாழ்.மாவட்ட அரச செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற மாவட்டச் சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் அமுலாக்கல் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதில் பிராந்திய சுற்றாடல் அலுவலக அதிகாரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச செயலர்கள், பிரதேச சபை அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், உள்

(02ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வரட்சிக்கால குடிதண்ணீர் விநியோகம் தீவுப்பகுதிக்கு 8 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கொக்குவில், மே27

குடாநாட்டில் வரட்சிக்காலத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கென சமூகசேவைத்திணைக்களம் முதற்கட்டமாக 8 லட்சம் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளது.

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

குடாநாட்டின் பல இடங்களிலும் குறிப்பாக, தீவுப்பகுதிகளான ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, காரைநகர், வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இத்தகைய சிரமம் எதிர்கொள்ளப்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு யாழ். அரச அதிபர் சமூகசேவைத்திணைக்களத்துடன் தொடர்புகொண்டதற்கிணங்கத் தற்போது நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதற்கட்டமாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு, காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு, வேலணைப் பிரதேச செயலர் பிரிவு, நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவு என்பவற்றில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கென தலா 2 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ-76)



தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு யாழ். மாவட்ட மாணவர் அமைப்பினர் நடத்திய பாண்ட் வாத்தியப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. பாண்ட் வாத்திய அணிவகுப்பை நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோர் ஏற்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்: கவிதரன்)

# குடும்பஸ்தரைக் காணவில்லையென மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே27

குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லையெனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராயைச் சேர்ந்த பார்த்தீபன் - பிரதீபன் (வயது-22) என்ற குடும்பஸ்தரே காணாமற்போனவராவார்.

கடந்த 9ஆம் திகதி காலை வீட்டிலிருந்து வெளியில் சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று அவரது தாயார் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காணாமற்போனோர் விசாரணை அதிகாரி செல்வி ரி.மொறின் மேற்கொண்டுவருகின்றார். (எ-7)

# மனநோயாளர் விடுதி விரைவில் கையளிப்பு

வலி.வடக்கு, மே 27

தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்தியசாலையில் சி.எச்.எவ்.நிறுவனத்தால் அமைக்கப்பட்ட மனநோயாளர் விடுதி சுகாதாரத் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளது.

இந்த கையளிப்பு நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளதாக மாகாண சுகாதார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-13-86)

# உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டைகள் வந்தன

யாழ்பாணம், மே 27

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்கு பாடசாலை ரீதியாகத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த வாரம் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கடந்த வாரம் கிடைக்கப் பெற்ற பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனைத்தும் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளைத் தத்தமது பாடசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் யாழ்.கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (8)

# இராணுவ உயர்மட்டக் குழு ஆயுதம் வாங்க சீனா பயணம்

இலங்கை இராணுவத்திற்குத் தேவையான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான பேச்சுகளை நடத்துவற்காக இராணுவ உயர்மட்டக் குழுவொன்று சீனாவிற்குச் சென்றுள்ளது.

இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான குழுவினரே சீனா சென்றுள்ளனர். சுமார் ஆறுவார காலம் சீனாவில் தங்கியிருக்கும் மேற்படி குழு, அங்கு முக்கிய இராணுவ உயரதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இலங்கை இராணுவத்தினருக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் பயிற்சிகள் குறித்து இந்தப் பேச்சுக்களின்போது விரிவாக ஆராயப்பட்டவுள்ளது எனத் தெரிகிறது. (எ-க)

# பரிசளிப்பும் கலைநிகழ்வும்

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையம், நயினை தில்லைவெளி அருள்மிகு ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலய வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்திய பொதுஅறிவு பரீட்சையின் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

பிடாரி அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் க.விஜேந்திரன் தலைமையில் நிலைய மண்டபத்தில் இரவு 8 மணியளவில் ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக நல்லூர் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.இரத்தினராஜா கலந்துகொள்வார்.

தொடர்ந்து நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்பாள் ஆலய மரபு வழி உறுப்பினரும், ஓய்வுபெற்ற பிரதேச செயலாளருமாகிய கா.ஆ.தியாகராஜா பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்.

பரிசளிப்பை அடுத்து கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

கலை நிகழ்வுகளாக பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் வழங்கும் சத்தியவான் சாவித்திரி நாடகம், யாழ். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவின் வில்லுப்பாட்டு என்பன நடைபெறும். (எ-12)



யாழ். பண்ணைப் பாலம் சேதமடைந்துள்ளது. இதனையடுத்து பாலத்தின் ஊடாகப் பயணம் செய்வோர் அவதானமாகச் செல்லவேண்டும் என்பதை வலியுறுத்தி பாலத்தில் சிவப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: பிரபா)

# புகைகக்கும் வாகனங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குடாநாட்டில் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் தீங்குகள் தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் வகையிலான சில திட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம், குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களில் சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் - அதிகமாகப் புகை கக்கிக் கொண்டு செல்லும் வாகனங்களின் அனுமதிப்பத்திரத்தைச் ரத்துச் செய்து - அவற்றை போக்குவரத்தில் ஈடுபடாமல் தடைசெய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

முதலில் வாகன உரிமையாளர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவது என்றும் பின்னர் இதனை நடைமுறைப்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தச் கலந்துரையாடலில் வேறு சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. அவை வருமாறு -

★ உலக சுற்றாடல் தினமான ஜுன் மாதம் 5ஆம் திகதி கோப்பாய் பிரதேசத்திலுள்ள பாதீனியச் செடிகளை அழித்தல்.

★ வீதித்திருத்த வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஊரி மண்ணிலிருந்து பெருவாரியான புழுதி கிளம்புவதால் சுவாச நோய்கள் மற்றும் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் திருத்தவேலைகள் நடைபெறும் வீதிகளில் போடப்பட்டிருக்கும் ஊரி மண்ணுக்கு மேல் சில தினங்கள் நீர் விசிறுதல்.

★ யாழ். மாவட்டத்திலுள்ள இயந்திரத் தொழிற்சாலைகள் - குறிப்பாக கல் உடைக்கும் தொழிற்சாலை, மில் என்பன மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

★ வீதிகள் திருத்த வேலைகளின் போது தாரை எரிப்பதற்கு ரயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்தி அதற்குப் பதிலாக தென்னம் பொச்சு மட்டை போன்றவற்றைப் பயன்படுத்துதல்.

★ ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் ஒலி பெருக்கிகள் மூலம் அதிகூடிய சத்தத்தில் பாடல்கள் மற்றும் ஏனைய விடயங்கள் ஒலி பரப்புவதை தடுக்கவேண்டும். (த-7)

# திருமலை நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த மதக் குரு ஒருவர். மேற்படி இடத்தில் புத்தர் சிலையை ஸ்தாபித்தவர் என்று ஓட்டோச் சாரதி ஒருவரின் பெயரைக் கொடுப்பதற்கு அந்தச் சாரதியின் உதவியைப் பெற்றுக்கொண்டார்.

அதிகாரமளிக்கப்படாத இந்தச் சிலை ஸ்தாபிக்கும் நடவடிக்கை குறித்துத் திருகோணமலை நகரசபை அதிகாரிகள் பொலீஸாரின் கவனத்துக்குக்கொண்டுவந்ததை அடுத்து அவர்கள் அதனை நீதிமன்றத்துக்கொண்டு சென்றனர். இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்துத் தனது உத்தரவில் நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

அதேசமயம் -

இந்தப் பிரதேசத்தில் நிலவும் சமாதானச் சூழ்நிலை காரணமாகத் தனது அரசியல் ஆதரவு சரிந்துசெல்வதால் ஜே.வி.பியும் அது சார்பான அமைப்பும் சிங்கள இயக்கம் என்ற பெயரில் - மதத்தின் பேரால் - இன வன்செயல்களை ஏற்படுத்தி அதன்மூலம் அரசியல் செல்வாக்கைப் பெறமுயற்சிக்கின்றன.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டுகிறோம். அப்படிச் செய்வீர்களானால், அது இந்தப் பிரதேச மக்கள் இந்த நாட்டின் நீதித்துறை மீதும், உங்கள் அரசின் மீதும் நம்பிக்கை கொள்ள வழிசெய்யும்.

அத்தோடு, அது சட்ட - ஒழுங்கு நிலையை மேம்படுத்தி, அதன் மூலம் இந்த நேரத்தில் மிக முக்கியமான விடயமான இப்பிரதேச அமைதியைப் பேணுவதற்கும் உதவும்.

பாதுகாப்பு நிலைவரத்தை மேம்படுத்துவதற்காக மேலதிக துருப்புகளை கடமையில் ஈடுபடுத்திக் தாங்கள் சரியான நடவடிக்கை எடுத்தீர்கள். ஆனால், பாதுகாப்புப் படைகளில் (ஊர்காவல் படையில்) உள்ள சில சக்திகள் வெறுக்கத்தக்க சம்பவங்களை ஏற்படுத்தி, அதற்கு ஒரு பலியாட்டைத் தேடி, கடைசியாக அவற்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது கொண்டு போய் முடிக்கின்றன. இதுதான் நாட்டின் இந்தப் பகுதியில் இன்று நிலவும் துர்ப்பாக்கியமான நிலைமையாகும்.

பக்கச்சார்பற்ற, நடுநிலையான எவரும் இந்த நடவடிக்கைகளை நாட்டில் நிலவும் சட்ட ஏற்பாடுகளை மீறியவை என்றே நிச்சயம் நோக்குவர்.

மேற்படி விடயங்களைக் கருத்தில் எடுத்து, நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதன் மூலம், திருகோணமலை பஸ் நிலையத்துக்கு முன்பாக சிலையை வைப்பதற்கு முன்னர் இருந்த வழமை நிலையை ஏற்படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். தங்களின் விரைவான பதில் வரவேற்கப்படுகின்றது - என்று உள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் பிரதமர், பொலீஸ் அதிகாரிகள் மற்றும் திருகோணமலையில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (எ-க)

# எம்.பி. பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதால் அதன் அடிப்படையில் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் என அஞ்சிய எஸ்.பி.திஸநாயக்கா அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுச்செய்தார். அந்த மனுவே தற்போது நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

எஸ்.பி.திஸநாயக்கா சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் -

சட்டத்தினால் இரண்டு ஆண்டுகள் தண்டனைக்கு உட்படுத்தக்கூடிய குற்றம் ஒன்றை ஒருவர் இழைத்திருந்தால்தான் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கமுடியாது. ஆனால், எஸ்.பி.திஸநாயக்காவுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றமானது, அவ்வாறு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையால் சிறைவாசம் ஆண்டுக்கணக்கினால் சுட்டிக்காட்டப்படும் ஒரு குற்றமல்ல. அவர் இழைத்ததாகக் கூறப்படும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கு இவ்வளவுதான் தண்டனை என எந்தச் சட்டத்திலும் வகைப்படுத்தவில்லை. நீதிமன்றம் தனக்குப் பொருத்தமானது எனக் கருதும் தண்டனையை விதிக்கும் குற்றமே அது. அதனை இரண்டு ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தண்டனை விதிக்கும் குற்றங்கள் என்ற வகையில் வகைப்படுத்த முடியாது.

எனவே, உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை வைத்துக்கொண்டு திஸநாக்காவின் எம்.பி. பதவியைப் பறித்துவிடக்கூடாது. அப்படி பறிக்க எடுக்கும் முயற்சிகளைத் தடுக்க உத்தரவிட வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர் உட்படப் பலர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.என்.சொக்ஸி ஆஜராகி வாதாடினார்.

ஆனால், அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பாலித்தபெர்னாண்டோ இந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரிக்க முடியாது என வாதிட்டார்.

இந்த நாட்டின் உயர்நிலை நீதிமன்றம் உயர்நீதிமன்றம். அதன் தீர்ப்பையோ அதன் விளைவான தொடர் நடவடிக்கைகளையோ கேள்விக்குள்ளாக்கும் நியாயாதிக்கம் இந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் உட்பட வேறு எந்த நீதிமன்றுக்கும் கிடையாது. எனவே, உயர் நீதிமன்றத் தீர்ப்பின் தொடர்விளைவுகளை விசாரிக்கக்கோரும் இந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்று விசாரிக்கவோ அல்லது எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் (அழைப்பாணை) அனுப்பவோ முடியாது - என்றார் அவர்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் எதிர்மனுதார்களுக்கு நோட்டீஸ் அனுப்ப மறுத்துவிட்டனர். இதனால் மனு தள்ளுபடியாயிற்று. (எ-க)



தமிழகத்தின் விழுப்புரம் கோட்டக் குப்பம் அருகே வெள்ளோட்டம் விடப்பட்ட படகில் அரச அதிகாரிகள் புறப்படுவதையும், படகு கவிழ்ந்து அவர்கள் கடலில் தத்தளிப்பதையும் மாவட்ட அரச அதிபரை மீனவர்கள் கரை சேர்ப்பதையும் படங்களில் காணலாம்.

# வெள்ளோட்டப் படகு கவிழ்ந்து அரச அதிகாரிகள் தத்தளிப்பு

திண்டிவனம்,மே27

தமிழகத்தில் வெள்ளோட்டம் நடத்திய படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த மாவட்ட அரச அதிபர் (கலெக்டர்) உட்படப் 12 பேர் கடலில் மூழ்கினர். அவர்களை மீனவ இளைஞர்கள் காப்பாற்றிக் கரைசேர்த்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு படகுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி கோட்டக் குப்பம் பகுதி மீனவர்களுக்கு படகுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அப்போது புதிய படகுகள் கடலில் வெள்ளோட்டம் விடப்பட்டன. அவற்றில் ஒரு படகில் விழுப்புரம் மாவட்ட அரச அதிபர் பாலச்சந்தர், உயரதிகாரி இறையன்பு, பொலீஸ் அதிகாரி, மருத்துவப் பேராசியர் ஆகியோர் உட்படப் 12 பேர் பயணித்தனர். இந்தப் படகு கடலுக்குள் சுமார் 50 மீற்றர் தொலைவில் சென்றபோது இராட்சத அலை ஒன்று படகைக் கவிழ்த்தது.

இதனையடுத்து அரச அதிபர் உட்பட படகிலிருந்த அதிகாரிகள் கடலில் தத்தளித்தனர். உடனடியாக விரைந்து செயற்பட்ட மீனவ இளைஞர்கள் கடலில் நீந்திச் சென்று 12 பேரையும் காப்பாற்றினர். காப்பாற்றப்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அதிக பட்சம் 5 அல்லது 6 பேர் மட்டுமே பயணிக்கக்கூடிய படகில் 12 பேர் அதிலும் எழுந்து நின்றபடி பயணித்ததே படகு கவிழக் காரணம் என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ஒ)

# அல்கெய்டா மூத்த தலைவர் மூலம் முக்கிய தகவல்கள் வெளிவந்தன

பாகிஸ்தானில் சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட அல்கெய்டா மூத்த தலைவர் அபு'.ராஜ் அல்- லிபியிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அந்த அமைப்புக் குறித்த முக்கிய தகவல்கள் தெரியவந்துள்ளாதாக பாகிஸ்தானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இம்மாதம் 2ஆம் திகதி வடமேற்கு பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்ட அல்-லிபி, அல்கெய்டா அமைப்பின் மூன்றாவது உயர் மட்டத் தலைவர் ஆவார். அச்சம்பவத்துக்குப் பிறகு அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் கிடைத்த தகவலையடுத்து, அந்த அமைப்பைச் சேர்ந்த பலர் விரைவில் கைதுசெய்யப்படுவர் எனவும் விசாரணை அதிகாரிகள் கூறினர்.

பாகிஸ்தானில் ஒளிந்துள்ள அல்கெய்டாவினரை படைவீரர்கள் சுற்றி வளைத்து வருகின்றனர். விரைவில் மேலும் பலர் கைதுசெய்யப்படலாம் என்று விசாரணை அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடன் தங்கியிருக்கும் இடம் குறித்த தகவலை அல்-லிபி தெரிவித்தாரா? இல்லையா? என்பது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

# ஜெயலலிதாவின் இரு வழக்குகளை இணைத்து விசாரிப்பதற்கு எதிர்ப்பு



பெங்களூர்,மே27

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு, லண்டன் ஹோட்டல் வழக்கு ஆகியவற்றை சேர்த்து விசாரிக்க அரச சட்டத்தரணி எதிர்ப்புத் தெரிவித்தார். வழக்கு விசாரணை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு, லண்டன் ஹோட்டல் வழக்கு ஆகியவை பெங்களூரிலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் காலை பெங்களூர் நீதிமன்ற வளாகத்திலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஆரம்பமானது.

வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதா, தோழி சசிகலா அவரது உறவினர்களான சுதாகரன், தினகரன், இளவரசி ஆகியோர் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்களிக்கக் கோரி அவரவர் சட்டத்தரணிகள் மனுத்தாக்கல் செய்தனர். அவற்றை நீதிபதி ஏற்றுக் கொண்டார்.

சொத்துக்குவிப்பு வழக்கு, லண்டன் ஹோட்டல் வழக்கு இரண்டையும் சேர்த்தே விசாரிக்க வேண்டும் என்ற வாதத்தை சசிகலாவின் சட்டத்தரணி ஜோதி தொடர்ந்தார்.

அவர் தனது வாதத்தில் கூறியதாவது:-

இரண்டு வழக்குகளையும் சேர்த்தே விசாரிக்க வேண்டும். இந்த வழக்குகள் ஒருவர் மீதே தொடரப்பட்டுள்ளது. குற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலமும் ஒன்றே. எனவே இவ்விரு வழக்குகளையும் தனித்தனியே நடத்தக்கூடாது. அதற்குச் சட்டத்திலும் இடமில்லை.

அரசியல் பழிவாங்கும் நோக்கில் ஜெயலலிதா மீது இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. லண்டன் ஹோட்டல் வழக்கு 2000ஆம் ஆண்டில் தொடரப்பட்டது. இந்த வழக்கில் புதிதாகக் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர். இதைக் கூடுதல் குற்றப்பத்திரிகையாகத்தான் கருதவேண்டும்.

அதிகாரம் இருந்தது என்ற நோக்கில் அப்போதைய அரசு ஜெயலலிதா மீது வேண்டுமென்றே வழக்குத் தொடர்ந்தது. அரசுத் தப்பில் தொடரப்பட்ட மோசடி வழக்காகும் இது. வழக்குத் தொடுக்கப்பட்டவர்களை துன்புறுத்தலும், அவமானப்படுத்தவும் கூடுதலாக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்றார் ஜோதி.

இந்நிலையில் அரச சட்டத்தரணி ஆச்சர்யா இந்த இரு வழக்குகளையும் சேர்த்து நடத்தக் கூடாது என்று வாதிட்டார். வழக்குகளை சேர்த்து நடத்தக் கூடா தென்று இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதை அவர்சுட்டிக்காட்டினார். அவரது வாதம் முடிவடையாத நிலையில் வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

ஜெயலலிதா முதல் தடவை முதல்வர் பதவி வகித்த காலகடத்தில் வருமானத்துக்கு மீறி சொத்துக் குவித்தார் என்று ஒரு வழக்கும் பிரிட்டன் தலைநகர் லண்டனில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றை முறைகேடாகச் சம்பாதித்த பணத்திலிருந்து வாங்கினார் என்று மற்றொரு வழக்கும் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அமெ.தூதரகம் மூடப்பட்டது

ஜகார்த்தா,மே27

இந்தோனேசியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மூடப்பட்டுள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே இந்த அவசர தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் வரை இந்த அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்று அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இந்தப் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த எந்தவிதத் தகவல்களையும் அமெரிக்கத் தூதுரகம் வெளியிடவில்லை. (ஒ)

## இந்தியா-பாக். பேச்சு

இந்தியா, பாகிஸ்தான் இடையே 2003 நவம்பர் முதல் போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கு இடையேயான அமைதிப் பேச்சு தொடர்ந்து வருகிறது. சியாச்சின் மலைப் பகுதியில் இருநாட்டு வீரர்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை விலக்கிக்கொள்வது தொடர்பான பேச்சு நேற்று வியாழக்கிழமை ராவல்பிண்டியில் இருநாட்டு அதிகாரிகளிடையே ஆரம்பமானது. இந்த பேச்சு இரண்டு நாள்கள் நடைபெறுகிறது. அரபிக்கடலில் அத்துமீறி நுழைவதை தடுக்கவும் பேச்சு நடக்க உள்ளது. (ஒ)

# பா.ஜ.கவிலிருந்து நடிகை விஜயசாந்தி விலகல்

இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சியின் மகளிர் அமைப்பு தலைவரும் பிரபல நடிகையுமான விஜயசாந்தி அக்கட்சியில் இருந்து நேற்றுமுன்தினம் விலகினார்.

இதுகுறித்து ஹைதராபாத்தில் தனது தொண்டர்கள் மத்தியில் விஜயசாந்தி பேசியதாவது:-

ஆந்திர மாநிலத்தில் தொடர்ந்து பின்தாங்கிய நிலையில் இருக்கும் தெலுங்கானா பகுதியின் மேம்பாட்டுக்காக பா.ஜ.க. உட்பட எந்தக் கட்சியும் நியாயமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்கும்வரை நான் ஓய்வெடுக்கப் போவதில்லை. வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் தெலுங்கானாவுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் - என்றார் விஜயசாந்தி. (ஒ)

# கிளின்டன் இந்தியா விஜயம்



புதுடில்லி,மே27

முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் மூன்று நாள் பயணமாக நேற்றுமுன்தினம் இந்தியா வந்தார். எச்.ஐ.வி. கிருமி மற்றும் எய்ட்ஸ் ஒழிப்புத் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொள்ளவும், தமிழகத்தில் சுனாமியால் பாதித்த பகுதிகளைப் பார்வையிடவும் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன் இந்தியா வந்தார். மூன்று நாள்கள் அவர் இந்தியாவில் தங்கியிருப்பார். எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் ஒழிப்பு கருத்தரங்கை இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. டில்லியில் நடக்கும் இம்மாநாட்டில் கிளின்டன் முக்கிய உரையாற்றுகிறார். ஐ.நா. சிறப்புப் பிரதிநிதியாக கிளின்டன் வந்துள்ளார். டில்லியில் இருந்து இன்று காலை அவர் சென்னை புறப்படுவார். சுனாமி அதிகம் பாதித்த நாகபட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதித்த மக்களை சந்திக்கிறார். கிளின்டன் நடத்தும் அறக்கட்டளையின் சார்பில், இப்பகுதியில் சில கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு உள்ளன. இங்கு நடக்கும் மறுவாழ்வு நடவடிக்கைகளை அவர் பார்வையிடுகிறார். இன்று மாலை சென்னை திரும்பும் அவர் சுனாமியால் பாதித்த இந்தோனேசியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு பார்வையிட உள்ளார் அவர். (ஒ)

# அணுவாயுதப் பரம்பல் கட்டுப்பாடு மாநாட்டில் அமெ.மீது குற்றச்சாட்டு

வாஷிங்ரன்,மே27

அணுவாயுதப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கை மாநாட்டில் அமெரிக்கா மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உறுதிமொழியிலிருந்து பின்வாங்கியிருப்பதன் மூலம் அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு தவறான வழியைக் காட்டியிருக்கிறது என்று கூறியே நிபுணர்களும் ராஜதந்திரிகளும் சாடியுள்ளனர்.

1970ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அணுவாயுத பரம்பல் தடுப்பு உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்யும் மாநாடு ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெறுகின்றது.

இதனை மேம்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் குறித்து பொது இணக்கத்தை எட்ட அங்கத்துவ நாடுகள் தவறியிருக்கின்றன என்று மாநாட்டின் முடிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக அரங்கில்






# இருளில் மூழ்கியது மொஸ்கோ நகரம்

மொஸ்கோ,மே27

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் மின் தொகுப்பில் ஏற்பட்ட கோளாறால் மின் இணைப்பு நேற்றுமுன்தினம் துண்டிக்கப்பட்டது. இதனால் மின் ரயில்கள், சுரங்க ரயில், டிராம், டிராலி பஸ்கள் போன்றவற்றின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மொஸ்கோவின் புறநகர் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் மின் விநியோகம் இல்லாததால் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. குடியிருப்புகள் அனைத்திலும் மின்சாரம் இல்லாததால் மொஸ்கோ இருளில் மூழ்கியிருந்தது.

# ஆண் குழந்தையின் வயிற்றில் கருமுட்டை

சீனாவில் சாங்காஷாவில் 9 மாத ஆண் குழந்தையின் வயிற்றில் இரு கரு முட்டைகள் இருப்பது கண்டறியப்பட்டது. தற்போது அவற்றை சத்திரசிகிச்சை மூலம் மருத்துவர்கள் அகற்றிவிட்டனர். எனினும் அந்தக் குழந்தையின் நிலை கவலைக்கிடமாகத்தான் உள்ளது. தொடர்ந்து 'கோமா'வில்தான் இருந்து வருகிறான். வயிற்றுப்பகுதியில் வீக்கம் உள்ளது.

இந்தக் குழந்தையின் தாய் கர்ப்பமாக இருந்தபோது மூன்று குழந்தைகள் பிறக்க வாய்ப்பிருந்தது. ஆனால் போதிய உணவை அவர் உட்கொள்ளவில்லை. இதுவே குழந்தையின் பிரச்சினைக்குக் காரணமாக இருக்கலாம் என மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# முக்கிய தீர்மானமொன்றை ஜனாதிபதி அடுத்தவாரம் மேற்கொள்ளுவாராம்

கொழும்பு,மே27

அடுத்த வாரத்தில் அரசியல் ரீதியிலான முக்கிய தீர்மானமொன்றை ஜனாதிபதி மேற்கொள்ள உள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுவதாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 23ஆம் திகதியன்று ஜப்பான், டோக்கியோ நகரில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் இலங்கைச் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான தகவலொன்று பரவியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தற்போது ஜப்பானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுவரும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைமையிலான குழுவினர் ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷியைச் சந்தித்த சமயம் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் ஜே.வி.பி. பிரதிநிதிகளுக்கும் இதுபற்றித் தெரிவித்தனர் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறந்த விவசாயிகளைத் தெரிவுசெய்ய திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்;மே27

யாழ்குடாநாட்டிலுள்ள விவசாயிகளில் சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு விவசாயத் திணைக்களத்தினால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விவசாய முயற்சியில் ஆர்வத்தை ஏற்படுத்தி உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் அதிகரிக்கவும் பொருத்தமான தொழில்நுட்பப் பாவனையை ஊக்குவிப்பதற்காகவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

அந்தவகையில், 2005ஆம் ஆண்டில் விவசாயச் செய்கையில் சாதனை படைத்த 80 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதுபற்றிய மேலதிக விவரங்களை அறிய அந்தந்தப் பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்புகொள்ளுமாறு விவசாயிகளை யாழ்.உதவி விவசாயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஒ-202)

# கல்லுண்டாய் உப்பளப் பகுதியை தூய்மைப்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே27

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய் உப்பளப் பகுதியைத் தூய்மையாக்க நடவடிக்கை எடுக்கவும்.

- இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், வலி.தென் மேற்குப் பிரதேசசபைச் செயலரைக் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

மாந்தை உப்பு நிறுவனத்துக்குச் சொந்தமான உப்பளங்களில் கல்லுண்டாய் உப்பளமும் ஒன்றாகும். இந்த உப்பளப் பகுதியில் கழிவுகள், குப்பை கூளங்கள் கொட்டப்படுகின்றன என்றும் -

இதனால், உப்பு உற்பத்திச் செயற்பாடுகளை மீளமைக்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் -

வடபிராந்திய மாந்தை உப்பு உற்பத்தி நிறுவன முகாமையாளர் வலி.தென்மேற்குப் பிரதேச செயலரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

இதனையடுத்தே வலி.தென்மேற்கு கல்லுண்டாய் உப்பு உற்பத்திப் பிரதேசத்திற்கு அருகில் கழிவுகள் கொட்டப்படாமல் தடுக்கும்படியும் -

ஏற்கனவே கொட்டப்பட்ட கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் - மானிப்பாய் பிரதேசசபைச் செயலரைக் கேட்டுள்ளார்.(ஒ-185)

## குருக்கள் கௌரவிப்பு

காரைநகர்,மே27

காரைநகர் திருமணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் 'வேதாகம ஞானவாரி' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நூறாவது ஆண்டு நிறைவு நிகழ்வும் மணவாளக் கோல சதாபிஷேகப் பெருவிழாவும் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றன. இவ்விழாவில் வைத்துக் குருக்களின் இறைபணியைப் பாராட்டி காரைநகர் மூக்கம்பிட்டி மக்களால் மேற்படி பட்டம் வழங்கப்பட்டது. (ஒ-73-202)

## இந்துநாகரிக பாட இலவச பயிலரங்கு

யாழ்ப்பாணம்,மே27

2005 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இந்து நாகரிக பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு அகில இலங்கை இந்துமாமன்றக் கல்விக் குழுவால் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இலவச பயிலரங்குகள் நடத்தப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியிலும், பிற்பகல் ஒரு மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் -

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் பயிலரங்குகள் நடைபெறவுள்ளன.

மேற்படிப் பயிலரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட தொகுப்பு நூல் ஒன்றும் இலவசமாக வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-203)

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே27

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 நாள்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த ஆங்கிலமொழி மூல விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-12)

## கூட்டத்துக்கான நேரம் மாற்றம்

பரீட்சை நிர்வாக அலுவலர்களுக்கு நாளை 28ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவிருந்த அறிவுறுத்தல் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (8)

# அடுத்த வருடத்துக்கான மாணவர் அனுமதி மாகாணப் பாடசாலைகளில் தாமதம்

கொழும்பு, மே27

தேசியப் பாடசாலைகளில் புதிதாக மாணவர்களை அனுமதிக்கும் செயற்பாடுகள் பூர்த்தியாகும் வரை மாகாணப் பாடசாலைகளில் மாணவர் அனுமதியை ஆரம்பிக்க வேண்டாமெனக் கல்வியமைச்சு, மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அதற்கமைய மேல்மாகாணம், தென்மேல், வடமத்திய, தெற்கு, மத்திய சப்ரகமுவ, ஊவா ஆகிய மாகாண சபைகளின்கீழ் செயற்படும் பாடசாலைகளில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரும் செயற்பாடுகள் பின்போடப்படக் கூடுமெனத் தெரியவந்துள்ளது.

தேசியப் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்காக 75ஆயிரம் விண்ணப்பங்கள் வரையில் இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் - அவற்றைக் கணனிமயப்படுத்தும் செயற்பாடுகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாகிவிடுமெனவும் - கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் தேசியப் பாடசாலைகளில் மாணவரை அனுமதிக்கும் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பான நெருக்கடி தளர்வடைந்துவிடுமெனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அணமையில், மாகாணக் கல்வி அதிகாரிகளோடு இது தொடர்பாகக் கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர்கள் கலந்துரையாடலொன்றை மேறகொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-206)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வரணி,மே27

வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி முற்பகல் 11மணிக்கு மெசென்சர் வீதி, கொழும்பு - 12 இல் உள்ள பிறையிட்ரன் ரெஸ்றறில் நடைபெறவுள்ளது. (8-170-202)

## சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,மே27

கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிற்சிநெறி நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத்தில் நடைபெறவுள்ளது. மன்றத் தலைவர் திருமதி ந.ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சமாதானமும் அபிவிருத்தியும்' என்னும் தலைப்பில் அருட்தந்தை சகாயதாஸும் - 'சமாதானத்திற்குப் பெண்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரமும் உரையாற்றுவர்.

(8-203)


25.05.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

02 15 16 56 02

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.70,12,700/- வெல்லப்படவில்லை


| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
| --- | --- | --- | --- |
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 70,12,700/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 25 | 5,000/- | 1,25,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 378 | 1,000/- | 3,78,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,176 | 500/- | 5,88,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 17,877 | 40/- | 7,15,080/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 16,927 | 20/- | 3,38,540/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,52,834 | 10/- | 25,28,340/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 76,88,350/-

200329534-4-51
200330451-1-59
200318787-9-01
200319572-4-39
200325821-6-13



## மரண அறிவித்தல்



### திருமதி முருகேசு முத்தாச்சிப்பிள்ளை

வல்வெட்டி, சீனட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு - முத்தாச்சிப்பிள்ளை 25.05.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணிக்கு எல்லங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சீனட்டி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (45870)


தகவல்:
தவராசா - சுகந்தன்.



## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசி மாதம் 14 ஆம் நாள் (28.05.2005) சனிக்கிழமை பகல் 11.00 மணிமுதல் 11.50 மணிவரையுள்ள திருவோண நட்சத்திரமும் சித்தயோகமும் கடக இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



எமது சிரேஷ்ட புத்திரன் **படிகலிங்கம்** அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி **பிரபா** அவர்களுக்கும்

கலட்டி அம்மன் திருவருள் துணைகொண்டு அம்மனின் திருமண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறும்)**

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

**திருமதி பூமலர் குடும்பத்தினர்**
பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி.

**திரு.திருமதி க.இராஜேந்திரம் குடும்பத்தினர்**
(வைரமுத்து மாமா) கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## காதில் பூச்சுற்றும் ஜே.வி.பியினர்

'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான்' என்ற மாதிரி பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தான் பிடித்த நிலையை விட்டுக்கொடுப்பதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றது ஜே.வி.பி.

சும்மாவா கூறினார்கள் 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' - என்று?

இப்படி விடாப்பிடியான - மூர்க்கத்தனமான - நிலைப்பாட்டுடன் ஜே.வி.பி. நிற்பதற்கு, பௌத்த - சிங்கள மேலாண்மைப்போக்கு இனவாதத்தைக் கையில் எடுப்பதன் மூலம் தமது வாக்கு வங்கியை விருத்திசெய்து கொள்ளலாம் என்ற நப்பாசைதான் - அவாதான் - முக்கிய காரணம். ஆனால், அப்படி இனவாதத்தைக் கிளப்பியதால்தான் தென்னிலங்கை உட்பட நாடு முழுவதுமே இவ்வாறு சீரழிந்தது என்பதும், இனிமேலும் அப்படிச் செய்வதன் மேலும் சீரழிவையே தரும் என்பதும் மெத்தப்படித்த ஜே.வி.பி. தலைவர்களுக்குத் தெரியாமல் இல்லை.

ஆனால், காலங்காலமாகத் தென்னிலங்கை அரசியலில் ஊறியிருக்கும் - இனவாதத்தைக் கிளப்பி, அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் - குறுக்கு வழி அரசியல் முறைமையைக் கைவிடுவதற்கு -ஜே.வி.பியினர் தயாரில்லை.

ஜப்பானில் போய் இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் ஜே.வி.பி. தலைவர்கள் கூறியவை எனத் தெரிவித்து வெளியான கருத்துக்கள் , அதனைத்தான் ஊர்ஜிதம் செய்துள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்காகப் புலிகளுடன் சேர்ந்து அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது, அமைதி முயற்சிகளுக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்று ஜப்பானில் அடித்துக் கூறியிருக்கின்றனர் ஜே.வி.பி. த்லைவர்கள் .

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானச் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன. இனிமேல் உத்தேசப் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு வெறும் நற்பெயரைப் பெற்றுக்கொடுப்பதாகவே இருக்கும் என்றும் அவர்கள் அகாஷியிடம் புதிய உண்மைகளை எடுத்து இயம்பியிருக்கின்றார்கள்.

இவற்றைப் பார்க்கும்போது சர்வதேசத் தலைவர்களையும், இலங்கை மக்களையும் ஜே.வி.பி. தலைவர்கள் எவ்வளவு தூரம் அறிவற்றவர்கள் - முட்டாள்கள்- என்று கருதுகிறார்கள் என்பது துலாம்பரமாகத் தெரிகின்றது.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி, அதில் அரசும் புலிகளும் சேர்ந்து செயற்படுவது தடைப்பட்டுப்போயிருக்கும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பாக அமையும் என்பதை, இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை எல்லாம் தெளிவுபடுத்திவிட்டன.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் வோட்டர் வில்ஸன், இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் கசன் பிளாங்கட் அம்மையார் ஆகியோர் கூட சந்திப்பின் பின்னர் இதைத்தான் திரும்பவும் வலியுறுத்தினார்கள்.

பொதுக்கட்டமைப்பில் அரசும், புலிகளும் சேர்ந்து இயங்குவது ஏற்கனவே இரண்டு தரப்புகளுக்கும் இடையில் நிலவிவரும் நம்பிக்கையீனத்தைக் களைந்து, பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்த வழிசெய்யும் என்பது அரசியலில் அரிச்சுவடி படித்தவர்களுக்குக் கூட புரியக்கூடிய விடயம். அதற்கு ஜே.வி.பி.யினர் வேறு அர்த்தம் கொடுப்பதன் மூலம் மக்களை ஏமாளிகளாக்கப்பார்க்கின்றனர்.

அதுமட்டுமல்ல, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன என்றும், இனிப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது ஆகப் புலிகளுக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுக்குமே தவிர வேறில்லை என்றும் கூறியிருப்பதன் மூலம் 'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்திருக்கிறார்கள்' ஜே.வி.பி. தலைவர்கள். புலிகளை அடிக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டு உண்மையை அல்லவா அவர்கள் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானம் தொடர்பாகத் தமிழர் தாயகத்தில் மட்டுமல்லாமல், தென்னிலங்கைப் பகுதிகளிலும் கூட நடந்து முடிந்த வேலைகள், இனிமேல் நடக்க வேண்டிய பாரிய பணிகள் ஆகியவற்றை அறிந்தவர்கள் - தெரிந்தவர்கள் -இது விடயத்தில் ஜே.வி.பி. தலைவர்கள், ஜப்பானில் கூறியவை மக்களினதும், உதவும் நாடுகளினதும் காதில்பூச்சுற்றும் வேலை என்பதை உணர்ந்துகொள்வர்.

தனது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் இத்தகைய காதில் பூச்சுற்றும் வேலைகளுக்கு அரசு எடுபடுமானால் இந்த நாட்டுக்கு மீட்சியே இல்லை.

# பொதுக்கட்டமைப்புக்கு முழு ஆதரவு
## லங்கா சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு.மே27

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகளுடன் அரசு செய்து கொள்ளவுள்ள பொதுக்கட்டமைப்பிற்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்திருக்கும் லங்கா சமசமாஜக் கட்சி, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி. கொண்டுள்ள நிலைப்பாட்டை அது மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென வலியுறுத்தியிருக்கிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நிலைப்பாட்டை விளக்கி லங்கா சமசமாஜக் கட்சி அறிக்கையொன்றை விடுத்தது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட [illegible]ின் பல பகுதிகளின் மீள்கட்டுமானப் பணிகளுக்காக 20 ஆயிரம் கோடி ரூபா தேவையென மதிப்பிடப் பட்டுள்ளது.

எதிர்வரும் மூன்று முதல் ஐந்து வருட காலப்பகுதிக்குள் இதற்கான உதவிகளை வழங்க சர்வதேச உதவி வழங்கும் சமூகம் உறுதியளித்துள்ளது. உறுதியளிக்கப் பட்ட 20 ஆயிரம் கோடி ரூபாவில் 90 வீதம் மானியமாகவும், இதரநிதி இலகு கடன் அடிப்படையிலும் வழங்கப்படவுள்ளன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் உட்படப் பாதிக்கப்பட்ட அனைவரும் இதன் அனுகூலங்களைப் பெறவேண்டும். இதற்கான பொதுக் கட்டமைப்பை நாம் இப்போது ஏற்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான இந்தக் கட்டமைப்பு நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இதன் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மீள்கட்டுமானச் செயற்பாடுகளைப் பிரதேச செயலாளர்கள் ஊடாக ஒவ்வொரு மாவட்ட அரச அதிபர்களும் முன்னெடுப்பர். ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் தீர்மானங்களை எடுக்கும். வடக்கு - கிழக்கிற்காக அரச பிரதிநிதியொருவர் உட்பட மூன்று பிரதிநிதிகள் அடங்கிய தேசியக் குழுவொன்றும் அமைக்கப்படும். இதில் முஸ்லிம் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியொருவரும் இருப்பார். ஒருவருட காலத்திற்கான இந்தக் கட்டமைப்பு, ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குள்ளான பகுதிகளில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும்.

இந்தப் பொதுக்கட்டமைப்பானது ஸ்தம்பித்துப்போயுள்ள அமைதி முயற்சிகளை முன்னெடுக்க உதவுமென்பது லங்கா சமசமாஜக் கட்சியின் அபிப்பிராயமாகும். பொதுக்கட்டமைப்புக் குறித்து அச்சமடையவும் தேவையில்லை. ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் அனைத்துப் பகுதிகளின் மக்களுக்கும் சமமான உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்பது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதியின் முயற்சிக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஒத்துழைப்பை வழங்காமலிருப்பது ஏன் என்பதையும் லங்கா சமசமாஜக் கட்சி வினவுகிறது.

இதுவிடயத்தில் ஜே.வி.பி. கொண்டுள்ள நிலைப்பாட்டை அக்கட்சி மீள்பரிசீலனை செய்யவேண்டும். பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதானது விடுதலைப் புலிகளுடனான இணக்கப்பாட்டு முயற்சிகளை எதிர்ப்பதாகவே அமையும். அமைதி முயற்சிகளை எதிர்ப்பதானது மீண்டுமோர் இராணுவ ரீதியான செயற்பாடுகளுக்கே வித்திடும் - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-க)

## ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்.மே27

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு பாடசாலைப் பரீட்சார்த்திகளிடமிருந்தும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார்.

ஒரு பாடத்திற்கு 25 ரூபாவும் இரு பாடங்களுக்கு 30 ரூபாவும் 3 பாடங்களுக்கு 35 ரூபாவும் 4 பாடங்களுக்கு 40 ரூபாவும் 5 பாடங்களுக்கு 55 ரூபாவும் 5 இற்கு மேற்பட்ட பாடங்களுக்கு 70 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக அறவிப் படவுள்ளன.

பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் ஒரு பரீட்சார்த்தி ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே அனுப்பிவைக்கவேண்டும் எனவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 31 கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த 668 நகரங்களில் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை நடைபெறவுள்ளது. (ஐ-86-152-202)

## வவுனியா ஆலயத்துக்கு நிதி உதவி

வவுனியா.மே27

வவுனியா விநாயகர் ஆலயப் புனரமைப்பிற்காக 2 லட்சம் ரூபா நிதியை இந்துசமய அலுவல்கள் அமைச்சு வழங்கியுள்ளது.

நாடளாவிய ரீதியில் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளை அமைச்சு துரிதமாக மேற்கொண்டு வருகின்றது என்றும் -

அந்தவகையில் மேற்படி ஆலயத்திற்கான நிதியுதவியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார் எனவும் -

அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-202)

### பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துமாறு
## இலங்கை அரசுக்கு அழுத்தம் ஜேர்மன் கொடுக்கவேண்டும்
### வற்புறுத்தி இளையோர் அங்கு உண்ணாவிரதம்

பொதுக்கட்டமைப்பு, மீள்கட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் விடயங்களில் ஸ்ரீலங்கா அரசுக்கு ஜேர்மன் அரசு உரிய அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தித் தமிழ் இளையோர் அமைப்பின் ஜேர்மன் கிளையினர் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளனர்.

2005ஆம் ஆண்டுகான தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு அடுத்த மாதம் 11ஆம் திகதி இப்போராட்டம் நடத்தப்படுகிறது.

✦ விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்குமாறு ஸ்ரீலங்கா அரசை ஜேர்மனிய அரசு வற்புறுத்தவேண்டும்.

✦ ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிக்குச் சரியான அளவு மீள்கட்டுமான நிதி வழங்குவதற்கு ஜேர்மனிய அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

✦ ஸ்ரீலங்கா அர்சால் மேற்கொள்ளப்படும் தமிழ் மக்கள் மீதான படுகொலையை ஜேர்மனிய அரசு கண்டிக்க வேண்டும்.

✦ நிறுத்திவைக்கப்பட்ட சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பதற்கு ஜேர்மனிய அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

- ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஜேர்மனில் நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில்
## சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு விருதுகள்

யாழ்ப்பாணம்.மே27

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளைத் தமிழீழ மாணவர் அமைப்பு மேற்கொண்டு வருவதாக அந்த அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.கிருஷ்ணா தெரிவித்தார்.

இம்முறை சாதாரணதரப் பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுள்ள மாணவர்கள் விவரம் வலய ரீதியாகத் திரட்டப்பட்டு ஒவ்வொரு வலயத்திலும் பெறுபேறுகளின் அடிப்படையில் தலா 15 மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்விருது வழங்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 30ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான விருதுகளை வழங்கிக் கௌரவிப்பார். அத்துடன், மாணவர் எழுச்சி நாளை ஒட்டி தற்போது நடத்தப்பட்டு வரும் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் அன்றையதினம் வழங்கப்படும் என மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் கிருஸ்ணா தெரிவித்தார். (8-13)

## இலங்கை சமாதான முயற்சிகளோடு பொதுக்கட்டமைப்பு தொடர்புபட்டது
### ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி புலிகளிடம் தெரிவிப்பு

கொழும்பு.மே27

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு மற்றும் ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ நம்பிக்கை நிதியம் என்பன இலங்கை அமைதி முயற்சிகளுடன் தொடர்புடையவையென்று ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் காலை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் வோட்டர் வில்ரன், இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் செல்வி சுசன் பிளங்காட் ஆகியோர் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது உதவி வழங்கும் நாடுகள் அமைப்பின் கண்டிக் கூட்டம் தொடர்பாக புலிகளுக்கு விளக்கப்பட்டதுடன், பொதுக்கட்டமைப்பொன்றின் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. திருகோணமலையில் நிலவும் பதற்றம் மற்றும் கிழக்கில் இடம்பெறும் தொடர்ச்சியான கொலைகள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத் துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

**நாளை**

வைகாசி 14
சனிக்கிழமை
28.05.2005
திதி : பஞ்சமி
பிற்பகல் 3.25 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
முற்பகல் 10.01 வரை
(அக்கினி நாள் முடிவு)
முன்னிரவு 6.27 வரை
சுபநேரம் : 2.52 - 4.22
ராகுகாலம்: 8.52 - 10.22
(யாவும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உலகில் உயிரோடு வாழ்வது மட்டும் வாழ்க்கையல்ல. உயரிய கொள்கைகளுக்காக மடிவதிலும் உள்ளது.
- அல்பெயர்

# யாழ்ப்பாணம், புங்கங்குளம்

# வில்லையடி ஸ்ரீநாகபூஷணி அம்பாள்



## ஆலய வருடாந்தப் பொங்கல் விழாச் சிறப்பிதழ்

## 27-05-2005

## வில்லையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை!

### அம்பாளின் அருட்பார்வை

யாழ்.குடாநாட்டில் புங்கங்குளப் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியே ஆகும். ஆனால், இந்த அம்மனின் புங்கங்குள அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று. இற்றைக்கு சுமார் 39 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு, அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத்தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வ மரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தடவைகள் கண்டுவியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ்.நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்வமரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிகமிக மேலோங்கி உள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.



வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகல புங்கங்குளத்தூர் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்திற்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவசநிலை. அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக்காட்சிகள்.

அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்துவிடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம், அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோசங்கள் நீங்கிவிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

### நம்பியே கைதொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ்.நகரின் புங்கங்குளம் பகுதியிலே வில்லையடியிலே அமர்ந்து அருள் பாலிக்கும் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் அருட் பெருந்தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக!

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக
வரம் பெறலாமே!
நம்பியே கை தொழுவார்க்கு பிணி நீங்கிடுமே!!

## விழா சிறப்புற வாழ்த்துவோர்


கட்டடப் பொருள்கள், உழவு இயந்திர லான்ட்மாஸ்ரர், உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்கள்
**கே.வைத்திலிங்கம் கொம்பனி**
38,40, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2075.

றேடியோ, மணிக்கூடுகள், ரீ.வி.டெக் மற்றும் மின்சாரப் பொருள்களுக்கு
**சிவாஸ் சென்ரர்**
70, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3884

கோயிலுக்குத் தேவையான பட்டு, சரிகைத் துணிகள், பட்டுவேட்டிகள் சால்வைகள் மற்றும் நவீன சாறி வகைகள் முதலியனவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
54,பெரியகடை,
யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம் மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
**கச்சான் பிஸ்கட்**
தயாரிப்பு: T.S. நாதன்
இல.96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 2491

தரமான நல்ல பொருள்களை நீங்கள் நயமாக வாங்கிக்கொள்ள நாடுங்கள்:
**புதிய முருகன் வணிக நிலையம்**
(நியூ முருகன் றேடர்ஸ்)
56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க.முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க ஆபரணங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**அலங்கார் நகைமாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**
191(343), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

குளிர்பானம் தயாரிக்கும் தரமான பொருள்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**
161, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 2219

தரமான குளிர்பான வகைகளுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்:
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:
**சானுகா நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 3700

மின் உபகரணங்கள், மின்சாரப் பொருள்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள
**அபிராமி எலக்றிக்கல்ஸ்**
62/31, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த நல்ல இடம்:
**சோபனா நகைமாளிகை**
116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்:
**சிறி அமலா நகைமாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 5800

நவீன டிசைன்களிலான நாகரிகத்துக்கேற்ற தங்கப்பவுண் நகைகளை நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நல்ல குளிர்பானங்களுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் சிறந்த இடம்
**நாகவி கிறீம் ஹவுஸ்**
133/10, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளைச் செய்து கொள்ள நல்ல இடம்:
**சிறி வெல்கம் நகைமாளிகை**
56, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு,
(சந்தனமாதா கோயில் அருகில்)

# நேர்த்திக் கடனை நிறைவேற்றவென வற்றாப்பளையில் பக்தர் வெள்ளம்

ஞானக்கதிர்

ஆலயதரிசனக்குறிப்பு

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி இனிதே நிறைவுபெற்றது.

வழமைபோன்றே இம்முறையும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் அன்னையின் ஆலயத்தை நோக்கிப் படை எடுத்தனர்.

வீதியெங்கும் வாகன அணிகள் அணிவகுத்துச் சென்ற காட்சி அம்பாளின் மகிமையை எடுத்து விளக்கியது.

மதிய வெயிலுக்கு மத்தியிலும் டிராக்டர்களில் பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என



ஏராளமானோர் வற்றாப்பளையை நோக்கிப் படையெடுத்தனர்.

விசேட பஸ் சேவைகளைத் தமிழீழ போக்குவரத்துக் கழகத்தினர் மேற்கொண்டனர்.

லொறிகள், மினிபஸ்கள், கார், ஓட்டோ, டிராக்டர், லான்ட்மாஸ்டர், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் போன்ற வாகனங்களால் ஆலயச் சூழல் நிறைந்து காணப்பட்டது. அடியார்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வதிலேயே குறியாக இருந்தனர். காவடிகள், கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திகளே அதிகமாக இடம்பெற்றன. அடியார்கள் நேர்த்திக்காகப் பொங்கல் செய்வது வழமை. அடியார்களின் பொங்கலினால் ஆலய முன்றில் களைகட்டியிருந்தது. ஆலய வீதி எங்கும் அடியார்களின் காவடிகள் வந்தவண்ணமேயிருந்தன.



சிறுவர்கள் முதல் பெரியோர் வரை முள் குற்றி பக்தி சிரத்தையுடன் காவடி ஆடினர். பறவைக்காவடி, துலாக்காவடி, பாற்காவடி, புஸ்பகாவடி, பன்னீர்க் காவடி எனப் பல வகையான காவடிகள் அங்கே காணப்பட்டன.

ஆலய வீதியிலிருந்த ஒரு வயோதிபர் ஒருவரிடம் பூசை தொடர்பான விவரங்களைக் கேட்டேன். பொங்கல்உற்சவம் நிகழ்த்தப்படும் திங்களுக்கு முதலுக்கு முதனாகவரும் திங்கட்கிழமையில் பாக்குத் தெண்டல் நிகழ்வு இடம்பெறுவது வழமை.

பாக்குத் தெண்டல் என்பது ஒன்பது உபகரிப்பாளர்களின் வீடுகளுக்குச் சென்று மங்கலப் பொருள்கள், மஞ்சள், பாக்கு, வெற்றிலை என்பவற்றுடன் பொங்கலுக்கு வேண்டிய தட்சணைகளையும் பெற்றுக்கொள்வதே ஆகும்.

இது வற்றாப்பளை வருடாந்த பொங்கல் நிகழ்வுக்கு 15 தினங்களுக்கு முதல் வரும் சோமவாரத்தில் நடைபெறும்.

பாக்குத் தெண்டிய நாளுக்குப் பின்னும் பொங்கலுக்கு முன்னுமாகிய 8 ஆம் நாள் திங்களில் தீர்த்தமெடுத்தல் நிகழ்வு இடம்பெறும்.

தீர்த்தமெடுக்க வேண்டிய வெண்கலப் பாத்திரத்தின் வாய்கட்டப்பட்டு தோத்திரம் செய்து பறைமேளம் முழங்க விரதம் இருப்பவர்களும் அடியார்களும் பின்தொடர பாத்திரம் கொண்டு செல்லப்படும்.

பாக்குத் தெண்டியவரே தீர்த்தமெடுக்கும் பாத்திரத்தைச் சுமந்து செல்வார். முல்லைத்தீவு வடகடலில் ஆழமான பகுதியில் இருந்து எடுத்து வரப்படும் கடல்நீரைக் கொண்ட தீர்த்தக்குடம் வீதியால் கொண்டுவரப்பட்டு, அந்த உப்பு நீரில் ஒப்பரிய அற்புத விளக்கு எரிக்கப்படும் நிகழ்வு நடைபெறும்.

இம்முறை சுனாமித் தாக்கத்தால் அம்பாளுக்கு வழமையாகத் தீர்த்தமெடுக்கும் இடம் அடையாளம் காணமுடியாமல் போய்விட்டது. இருப்பினும் ஒரு குறிப்பிலே அங்கு சென்ற நோற்புக்காரர்கள் அம்பாளை வேண்டியபோது கடல் சமுத்திர நீரில் வட்ட வடிவில் வெள்ளை நிறமாக காட்சி அளித்தது. உடனே அந்த இடத்திலே தீர்த்தம் எடுக்கப்பட்டது. இந்த அதிசயத்தைக் கண்ணுற்ற நோற்புக்காரர் மெய்சிலிர்த்துப் போயினர்.

விளக்கு எரிக்கும் தினத்திலிருந்து பொங்கல் வரும் வரையான எட்டு நாள்களும் விரதம் அனுட்டிக்கும் அடியார்கள் இத்தினங்களில் காடுகரம்பை போன்ற இடங்களுக்குச் செல்லாமல் இப்பொங்கல் திருநாளுக்கு மதிப்பளித்து பயபக்தியுடன் காணப்படுவார்கள் - என்றார் அந்த வயோதிபர்.

அடியார்கள் அன்றைய தினம் (கடந்த திங்கட்கிழமை) விசாக நட்சத்திரமும் பூரணை தினமும் கூடியவேளையில் அந்திசாயும் வேளைக்காகவும் தமது நேர்த்திகளை நிறைவேற்றுவதற்காகவும் காத்திருந்தனர்.

அந்திவேளை வந்ததும் எங்கும் பொங்கல் களைகட்டத் தொடங்கியது.

இவ்வாறான ஒரு தினத்திலேயே அந்திவேளையில் இப்பகுதியில் கிழவி ரூபத்தில் வந்த கண்ணகித் தெய்வம் மாடு மேய்த்திடும் சிறுவரிடம், தான் பசியால் வாடுகிறேன் என்று தன் வாய்திறந்து கூறியதனாலேயே சிறுவர்கள் தாயாருக்கு அமுது படைத்து நின்றார்கள்.

மேலும், தான் கண்ணகி என்பதை சிறுவர்களுக்கு உணர்த்தி, 'வருடாவருடம் இத்தினத்தில், இப்பொழுதில் இங்கே என்னை வழிபாடாற்றினால் நான் உங்களுக்கு அருள்வேன்' என்று கூறி மறைந்தார் என்று புராணக் கதை ஒன்று உண்டு.

இதன்காரணமாகத்தானோ இம்முறை வழமைக்கும் அதிக எண்ணிக்கையில் அடியார் கூட்டம் அலை மோதியது.

ஒலிபெருக்கிகளில் ஓயாமல்தவறவிடப்பட்ட அடியார்கள் தொடர்பான தகவல்கள் ஒலிபரப்பப்பட்டவண்ணமே இருந்தன. அந்தளவிற்கு அடியார்கள் பார்க்கும் இடமெங்கும் காணப்பட்டனர்.


சிறுவர் முதல் பெரியோர் வரை அம்பாளின் புனிதம் உணர்ந்து அங்கேஅமைதியாக பக்தியுடன் வழிபாடாற்றியதைக் காணமுடிந்தது.

அம்மனை வேண்டியதால் தமக்குற்ற நோய் பிணிகள் நீங்கிய மைக்காகவும் , தாம் நல் வாழ்வுஅடைந்தமைக்காக வும் அடியார் கள் அம்பா ளின் சந்நிதி யில் அங்கப் பிரதட்சணம், அடியளித்தல், தீக்குளித்தல், காவடி, பாற்செம்பு, தீச்சட்டிஎடுத்தல், பொங்குதல், அர்ச்சனை செய்வித்தல், மடிப்பிச்சை கொணர்தல், காணிக்கை செலுத்தல் போன்றவற்றை முறையாக பக்தி சிரத்தையுடன் அனுட்டித்து தாயாருக்கு வேண்டுதல் நிறைவேற்றிய காட்சி மனதில் நாம் வற்றாப்பளை வந்ததன் புண்ணியத்தை உணர்த்தியது.

பகீரதன்

வற்றாப்பளை நாயகியை நாம் வழிபட்டு வற்றாத செல்வமிகு வாழ்வை அடைவோமாக! ★

# தெய்வீக ஸ்தலங்களில்



சுழிபுரம், பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் பதினைந்து வருடங்களாகச் சேவையாற்றிவருகின்ற நாதஸ்வரவித்துவான்களான என்.ஆர்.கே.கோவிந்தசாமியின் புதல்வர்களான இரத்தினகுமார், வாகீசன் ஆகியோர் ஆலய பரிபாலனசபையால் பொன்னாடை போர்த்து பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதனபோது எடுக்கப்பட்ட படம். அருகில் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ஸ்ரீபாஸ்கரக்குருக்களும் காணப்படுகிறார். (8)



யாழ்.வண்ணை ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலய அலங்கார உற்சவ சைவ சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் மற்றும் கௌரவ விருந்தினர்களான பண்டிதர் வ.பேரின்பநாயகம் , கு.பாலசண்முகன், அ.பகீரதன், சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன், சிவநேயர் இ.தவகோபால், ஆலய அர்ச்சகர் ம.சுதாகர சர்மா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் செல்வன் செ.சிவசுதர்சன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். (8)




அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. அந்நிகழ்வில் சுவாமி ஞானப்பிரகாசியார் இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராசாவின் நெறியாள்கையில் உருவான 'ஜெனோவா' தென்மோடி நாட்டுக்கூத்து நடைபெற்றது. நாட்டுக்கூத்தில் பங்குபற்றிய கலைஞர்களைப் படத்தில் காணலாம். (8-204)



ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் ஆலய வருடாந்த உற்சவம கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

அதன்போது புனித சூசையப்பரின் திருச்சொரூபம் ஆலயத்தில் இருந்து பவனியாக எடுத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (8-16)

## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு
19 ✪ 02 ✪ 1935

உதிர்வு
06 ✪ 06 ✪ 2004

# அமரர் கந்தையா மகேஸ்பரன்

(ஓய்வு பெற்ற உயிரியல் ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
திதி: சங்கடஹர சதுர்த்தி (27.05.2005)

ஆண்டொன்று சென்றதையா
நீரெமை விட்டுச் சென்று
ஆனாலும் செல்லவில்லை
உம் நினைவு எமை விட்டு
பயணம் முடியும் வரை துணையிருப்பீர்
என்றிருந்தோம்
பாதி வழியில் பரிதவிக்க விட்டு
எங்கு சென்றீர்

நும் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கத்தாப்படி வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (45645) (39-45-15)

## ஜி.சீ.ஈ. பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தீவகம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் (கோப்பாய் கோட்டம் தவிர்ந்த) வலயங்களைச் சேர்ந்த - பரீட்சைப் பணிகளில் ஈடுபடவுள்ள - பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள், இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (ஜ-202)

வாடிக்கையாளர்களே...
பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம்
மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி, (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை.) யாழ்ப்பாணம்.
யாழ். வீதி. மானிப்பாய்.
E.mail: moorthylazer@yahoo.com
(C-42566) (54-15)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு — பத்தாம் ஆண்டு



| அமரர் | | திருமதி |
|---|---|---|
| **விஸ்வலிங்கம் திலகராசா J.P** | | **சிவபாக்கியம் திலகராசா** |
| 21.02.1911 | ← தோற்றம் → | 10.02.1917 |
| 08.05.2004 | ← மறைவு → | 11.04.1995 |

**வாழ்வில் பிரியமுடன் எம்மை நேசித்து, நல் வாழ்வுக்கு**
**ஒளி விளக்காய்த் திகழ்ந்த எமது அன்புத் தெய்வங்களே!**
**நிஜ வாழ்வில் நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்**
**எமது இதயத்தில் என்றும் ஒளி வீசிக் கொண்டே இருப்பீர்கள்.**

"பாக்கிய இல்லம்"
51, சந்தன மாதா வீதி,
சுண்டுக்குளி. (45776) (39-45-15)

உங்கள் அன்பான
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# முதலாவது சிரார்த்த நினைவஞ்சலி



**திதி : சங்கடஹர சதுர்த்தி**
**சிரார்த்த நாள் : 27.05.2005**

ஆறாத பாசம் எமக்களித்த அன்புருவே
அகத்திரையில் நிழலுருதி அகமெல்லாம்
கலங்கிற்றோமே
ஓராண்டு எமக்கிங்கு உறுகனவாய் மறைவாச்சே
உங்களது ஆன்மா தான் எமது குடி உதிப்பதெப்போ?



# அமரர் கந்தையா தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்)

இன்று 27.05.2005 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

புவனேஸ்வரி அம்மன் கோயிலடி,
உடுப்பிட்டி.

## தோற்றம்:-11.04.1937

## மறைவு:-08.05.2004

தங்கள் பிரிவால் துயரில் மூழ்கும்
**குடும்பத்தினர்.**

(C/43019) (56)

## தமிழர் தலைவிதியை எழுத ஒரு லட்சம் உயிர்களைத் தந்துள்ளோம்

# விடுதலைப் போருக்கு உலக அங்கீகாரம் கிடைக்கும் சூழ்நிலை உருவாகி வருகிறது

## புலிகளின் தளபதி அமிர்தாப் உறுதி

குமுதினிப் படுகொலையின் 20ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நெடுந்தீவில் அண்மையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் ஆற்றிய உரையின் முதற்பகுதி நேற்றைய உதயனில் வெளியானது. அதன் மீதிப்பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

தீச்சுவாலை நடவடிக்கையைத் தோற்கடித்து இலங்கையில் ஓர் இராணுவ சமநிலையை நாங்கள் கொண்டு வந்தோம். அதாவது, இராணுவ ரீதியாகப் புலிகளை வெல்ல முடியாது என்று ஸ்ரீலங்கா அரசுக்கு சொல்லிக் கொடுத்தோம். விடுதலைப்புலிகளின் வளர்ச்சியை நீங்கள் பார்க்க வேண்டுமானால் 1981 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் வைத்து லெப்டினன்ட் ஹூக்காஸ் சாள்ஸ் அன்ரனி இரு ஸ்ரீலங்காப் படையினரைச் சுட்டு 2 துவக்குகளை எடுத்துத் தலைவரிடம் கொடுத்தார். 10 ஆண்டுகள் கழித்து91 ஆம் ஆண்டு 10 மாதம் 7 ஆம் திகதி ஆகாயக் கடல்வழி இராணுவ யுத்தம் நடத்தியபோது இலங்கையில் இரு இராணுவங்கள் இருக்கின்றன என்ற செய்தியைச் சொன்னோம்.

அதற்கடுத்த 10 ஆண்டுகள் கழித்து 2001 ஆம் ஆண்டு 4 ஆம் மாதம் 25 ஆம் திகதி தீச்சுவாலையை முறியடித்து வெல்லப்பட முடியாத சக்தியாக விடுதலைப்புலிகள் இயக்கம் இருக்கிறது என்ற செய்தியைச் சொன்னோம். நாங்கள் சொல்வதெல்லாம் செயல். செயலுக்குத் தான் முக்கியம். தலைவர் அதைத்தான் சொல்லியிருக்கிறார்.

### ஒப்பந்தத்தில் நாம் மூழ்கிப் போகக்கூடாது

இதற்குப் பின்னர் செய்யப்பட்டதுதான் ரணில் - புலிகள் ஒப்பந்தம். ஒப்பந்தம் என்பதில் நாங்கள் மூழ்கிப் போய்விடக்கூடாது. வடக்கு - கிழக்குத் தாயகம், மன்னார், திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு உள்ளிட்ட 8 மாவட்டங்களை உள்ளடக்கியது. 18 ஆயிரத்து 860 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் வாழுகின்ற 35 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்வுக்காக முதலாவது பேச்சு 85 ஆண்டுகளுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் 1920 ஆம் ஆண்டு ஜே.எம்.பீரிஸ்க்கும் - அருணாசலம் ஐயாவுக்கும் நடந்தது.

2 ஆவது பேச்சு துரைசாமியாரால் 1924 இல் நடந்தது. 3 ஆவது பேச்சு 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்தம். 4 ஆவது பேச்சு 1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தம். 5 ஆவது பேச்சு 1985 இல் திம்புவில் ஜே.ஆருடன் பேசப்பட்டது. 6 ஆவது பேச்சு தமிழ் மக்களின் இருண்டகாலம். இந்திய - இலங்கை ஒப்பந்தம். 7 ஆவது பேச்சு 1990 ஆம் ஆண்டு பிரேமதாசாவுடன் பேசியது. 8 ஆவது பேச்சு 1994 இல் சந்திரிகாவுடன் பேசியது. 9 ஆவது பேச்சு ஒப்பந்தமாக 2002 ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் 2 ஆம் திகதி ரணிலோடு எழுதப்பட்டது.

85 ஆண்டுகாலம் பேசினோம்... எதைப் பற்றி வடக்கு - கிழக்குத் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, எங்களது மக்களை வாழவிடுங்கள் என்றோம். ஆனால், வாழ வழி கேட்ட தமிழ் மக்களுக்குச் சிங்கள அரசு சாவுரிமை மட்டுமே கொடுத்தது. இன்றுவரை 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்திருக்கிறார்கள்.

### இலங்கைத்தீவில் இரண்டு நாடுகள்

இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள் இருக்கின்றன. ஒன்று ஸ்ரீலங்கா. அந்நாடு 46 ஆயிரத்து 750 சதுரகிலோ மீற்றர் கொண்டது. அடுத்தது தமிழீழம். 18 ஆயிரத்து 860 சதுர கிலோமீற்றர் எங்களுடைய நாடு. எங்களது நாட்டின் விடுதலைக்காக முதலாவது மாவீரர் தொடங்கி இன்றுவரை 17 ஆயிரத்து 800 உடன் பிறப்புகளைக் களத்தில் கொடுத்திருக்கிறோம். ஒரு விடுதலை இயக்கமாகிய நாங்கள் சாதாரண உயிர்களைக் கொடுக்கவில்லை. எங்களுடைய மக்களும், போராளிகளுமாகச் சேர்ந்து இதுவரை ஒரு லட்சம் பேர் செத்துப் போயிருக்கிறோம். 35 லட்சம் தமிழ் மக்களின் தலைவிதியை எழுதுவதற்குத் தமிழினம் தன்னுடைய சார்பாக ஒரு லட்சம் உயிர்களைக் கொடுத்திருக்கிறது.

35 தமிழனுக்கு ஒரு தமிழன் செத்திருக்கிறோம். சுதந்திரம் கிடைத்ததா? பாதுகாப்புக் கிடைத்ததா? கௌரவமான வாழ்வு இருக்கிறதா? யாழ்ப்பாணத்தில் முகமாலையைக் கடந்தால் தெரியும். 100 மீற்றருக்கு ஒரு காவலரண். யாருக்கு யார் காவலரண்? உயர் பாதுகாப்பு வலயம். யாருக்கு உயர் பாதுகாப்பு வலயம்?

240 ஆண்டு காலம் பழமை வாய்ந்த ஆனையிறவை வீழ்த்தினோம். கடந்த 10 வருடமாக யாழ்ப்பாணத்தில் உட்கார்ந்திருக்கும் சிங்களப்படைக்கு ஏற்படப் போகும் கதியை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அதைச் செய்யத்தான் போகிறது. அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. அதற்காக நாங்கள் யுத்தத்தை விரும்பும் ஆள்கள் என்று நினைக்கக்கூடாது. நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றவர்கள். யுத்தமில்லாமல் இரத்தமில்லாமல் சரியாகத் தீர்வு கிடைக்குமானால் ஏற்றுக்கொள்வோம். இல்லையென்றால் அடிதான். அடியைத் தவிர வேறுவழி ஒன்றும் சிங்களவருக்குக் கிடையாது. இதை நாங்கள் பல இடங்களில் யுத்தக் களத்தில் பார்த்திருக்கிறோம். சிங்களப் படையை அடிப்பது என்பது எங்களுக்கு ஒரு சின்னப்பிரச்சினை. 20 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்களை எப்படிச் சிங்களப் படை வெட்டிக் கொன்றதோ அதே போல் மட்டக்களப்பில் இன்றும் எங்களது போராளிகளைச் ஸ்ரீலங்கா புலனாய்வுப் பிரிவினர் சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் பொறுமையாகத்தான் இருக்கிறார். தலைவருக்குத் தெரியும்; எப்போது எங்கே என்ன செய்யவேண்டும் என்று அவருக்குத் தெரியும்.

### எதையும் செயலிலேயே காட்டுவார் தலைவர்

தலைவர் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கியபோது 'சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்றார்கள். தலைவர் சொன்னார் 'வீடு வரும், வந்து குவியும்' என்றார். அதை இன்று செயலில் காட்டிவிட்டார் அல்லவா? இந்தியா வந்தது. டிக்சிற் சொன்னார் - 'ஒரு சிகரெட் பத்தி முடிவதற்கிடையில் 2 ஆயிரம் புலிப்படையை அழித்துப் பிரபாகரனைக் கைது செய்கிறேன், என்றார். தலைவர் சொல்லவில்லை தன்னைக் கைது செய்யமுடியாது என்று. தலைவர் காட்டியது செயல்.

ஜெயசிக்குறு வந்தது. 'இந்தா புலிகளின் கதை முடிகிறது' என்று ரத்வத்தை சொன்னார். 85 வீதம் தான் இருக்கின்றது என்றார். தலைவன் காட்டியது செயல். சமாதானத்தைக் கொண்டு வந்தார்கள். இவர்களுக்கு யுத்தமும் இரத்தமும் தான் தெரியும் என்று சொன்னார்கள். தலைவர் கூறவில்லை மற்றது தெரியாது என்று. தலைவர் மூன்று ஆண்டு காலமாகச் சமாதான நகர்வுகளை நகர்த்தியது செயல். உலகமே என்ன செய்வதென்று தெரியாமல் விழி பிதுங்கி நிற்கிறது.

இந்த விடுதலை இயக்கத்தை அழிப்பதற்குத்தான் எல்லோரும் திட்டமிட்டார்கள். ஆனால், எங்கள் தலைவரிடம் அந்தத் திட்டங்கள் எதுவும் எடுபடவில்லை. நாங்கள் பலமாக இருக்கின்றோம். பலம் தான் வாழ்க்கையைத் தீர்மானிக்கும். நாங்கள் பலமாக இருப்பதால்தான் எமது தேசத்தை வென்றெடுக்கமுடியும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது. எனவே, தாழப்போகிற கப்பலில் ஏற நினைக்காதீர்கள். தாழ்ந்து கொண்டிருக்கின்ற கப்பலுக்குப் பின்னால் போகாதீர்கள்.. மிதக்கிற கப்பலில் ஏறுவதற்கு யோசிக்க வேண்டும். வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறவர்களுக்குப் பின்னால் நகர்ந்து போவதற்கு யோசிக்கவேண்டும்.

### தாடியுடன் குந்தியிருக்கும் அலிபாபாவும் 40 திருடர்களும்

இங்கே அலிபாபாவும் 40 திருடர்களும் போல் இந்த இடங்களில் (நெடுந்தீவில்) தாடிக்காரர்கள் குந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாடி வழிப்பதற்கே நேரமில்லை. எப்படித் தமிழீழம் பிடித்துத் தரப் போகிறார்கள்? யாரைச் சுட்டுத் தமிழீழம் பிடிக்க வந்தார்களோ, ஸ்ரீலங்கா ஆமியைச் சுடவேண்டும் அல்லது ஸ்ரீலங்கா பொலீஸைச் சுடவேண்டும். சுட்டுத் தமிழ் மக்களுக்குத் தமிழீழம் பிடிப்போம் என்றார்கள். ஆனால், இவர்களுக்கு இப்போது ஸ்ரீலங்கா இராணுவம் காவல். ஒரு துப்பாக்கி ரவையைச் சிங்கள இராணுவத்துக்கு நேராகச் சுட்டேன் என்று வரலாறு இருக்கிறதா இவர்களுக்கு? 40,50 பேரை வைத்துக் கொண்டா இவர்கள் தமிழீழம் பிடிக்கப் போகிறார்கள்? 17,800 பேர் நாங்கள் வீரச்சாவடைந்திருக்கின்றோம்.

குறிப்பிட்ட பல ஆயிரம் பேர் படையாக இருக்கிறோம். சிங்களப் படையை மாறி மாறி அடித்துப் பலவீனப்படுத்தியிருக்கிறோம். ஆட்லறி தொடக்கம் முப்படையையும் வைத்திருக்கின்றோம். போரியலில் உலகில் யாரிடமும் இல்லாத போர்ப் பண்பு வைத்திருக்கின்றோம்.

நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டுத்தான் இந்த நிலைமைக்கு வந்திருக்கின்றோம். அப்படி என்றால் மற்ற ஆள்களால் எப்படித் தமிழீழம் பிடிக்க முடியும். அது கனவு. நாங்கள் சிங்களப் படைகளுக்கு மன்னிப்பு வழங்கினாலும் துரோகிகளுக்கு மன்னிப்புக் கிடையாது. அது வரலாற்றில் இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். விடுதலைப் போராட்டத்தில் இறுதிக் காலகட்டம் இது. நீங்கள் எந்தப் பக்கம் செல்வது? சிறந்த சமாதானத்துக்கான வழி எப்போதும் யுத்தத்திற்குத் தயாராக இருப்பதுதான். இன்றும் நாங்கள் களத்தில் துப்பாக்கியோடுதான் நிற்கின்றோம். சிங்களப் படையை நாம் மறித்துத் தான் வைத்திருக்கின்றோம். நாம் களத்தில் இல்லையெனில் சிங்களம் கிளிநொச்சிக்கு வந்துவிடும்.

மறித்து வைத்திருப்பதால்தான் இன்றும் எல்லையில் படை நிற்கிறது. சிறந்த சமாதானத்திற்கான ஒரே வழி எப்போதும் யுத்தத்திற்குத் தயாராக இருப்பது.

### யுத்தம் முடியவில்லை

யுத்தம் முடியவில்லை. வெடிச்சத்தம் ஓய்ந்திருக்கலாம். ஆனால், மட்டக்களப்பில் அது தொடங்கிவிட்டது, கிழக்கில் யுத்தம் தொடங்கிவிட்டது. வடக்கில் உருவாவதற்கான சாத்தியக் கூறுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதை நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். உங்களிடம் பொய் சொல்லி அரசியல் மாயை உருவாக்கவில்லை. ஏனென்றால் நாம் அரசியல் பிரிவினர் அல்லர். இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்கள். எப்படியெல்லாம் சிங்களப் படையை அடித்து அடித்து நாம் பலம்பெற்றோம் என்பதைத்தான் சொல்ல வந்திருக்கின்றோம்.

முல்லைத்தீவில் 2 ஆயிரம் சிங்கள இராணுவம் இருந்தது. அவர்களை அடித்து விரட்டி மீளப் பிடிக்க 24 மணித்தியாலம் தான். கிளிநொச்சியில் 2 ஆயிரம் இராணுவத்தை அடித்து விரட்டிப் பிடிக்க 48 மணிநேரம். பரந்தன் 23 மணித்தியாலம். ஆனையிறவு 34 நாள்கள். தீச்சு வாலை 72 மணித்தியாலம். கட்டுநாயக்க ஒரு சில மணித்தியாலம். சண்டை ரீதியாக நாங்கள் எவ்வளவோ சாதித்திருக்கின்றோம்.

### சமாதானத்தால் எதைச் சாதித்தோம்

இன்று மூன்று ஆண்டுகாலமாகத் தற்காலிக சமாதானம். என்னத்தைச் சாதித்தோம்? இந்த மண்ணிலிருந்து ஓர் அடியாவது சிங்களப் படை போயிருக்கின்றதா? யாழ்ப்பாணத்தில் இன்னமும் சிங்களப் படை இருப்பதற்கு அவர்கள் என்ன எமக்கு குஞ்சியப்பனா? இன்றும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். நாங்கள் உலக நாடுகளின் கட்டளையை எதிர்பார்க்கவில்லை. எங்களின் தலைவரின் கட்டளைக்குத் தான் காத்திருக்கின்றோம். எங்கள் தலைவர் தான் 33 ஆண்டு காலமாக இந்த விடுதலைப் போராட்டத்தை நேர்த்தியாக நகர்த்திக் கொண்டு இருக்கிறார்.

தலைவர் தானே ஒவ்வொரு கட்டத்திலும் சரியான முடிவெடுத்து விடுதலைப் போராட்டத்தைச் சரியாக நகர்த்திச் சென்றார். தனது 33 வயதில் உலகின் 4 ஆவது படைவலுவைக் கொண்டிருந்த இந்தியாவை 2 ஆண்டு காலம் பந்தாடிய தலைவருக்கு வயது இப்போது 50. அவருக்கு எத்தனை வருடப்போர் அனுபவம் இருக்கிறது. எத்தனை போர் யுத்திகள் தெரியும்? சந்திரிக்காவுக்கும், ரணிலுக்கும், மஹிந்தவுக்கும் ஏ.கே.துப்பாக்கியின் நிறம் என்ன என்று தெரியுமா? எந்தத் துப்பாக்கியால் அடித்தால் எதைச் சாதிக்க முடியும் என்று தலைவருக்குத் தான் தெரியும்.


தளபதி அமிர்தாப்

### ஜே.வி.பி- ஹெலஉறுமய ஒரே கூப்பாடுதான்

இன்று தென்னிலங்கையில் ஜே.வி.பி. ஹெல உறுமய கட்சிகள் ஒரே கூப்பாடுதான். அவர்களுக்கு ஓய்வே கிடையாது. விமல் வீரவன்ஸவுக்குத் தெரியாது. தங்களுடைய அரசியல் இலாபத்திற்கான யுத்தத்துக்காக எத்தனை ஆயிரம் சிங்களப் படைகள் வடக்கு- கிழக்கில் உயிரிழந்தனர் என்று. இன்று அவர் ஆனையிறவுக்கு வந்தாலும் நாளைக்கு நாங்கள் கூட்டிக்கொண்டு போய்க் காட்டுவதற்குத் தயாராக இருக்கின்றோம். எத்தனை சிங்களப் படையின் எலும்புக் கூடுகள் ஆங்காங்கே கிடைக்கின்றன என்று ஒரு நாட்டுக்காகச் செத்த இராணுவத்தினரின் உடலைக்கூட எடுத்து அடக்கம் செய்யமுடியாத தென்னிலங்கை அரசியல் வாதிகள் இன்று யுத்தம் பற்றிக் கதைக்கிறார்கள்.

யுத்தத்திற்கு அவர்கள் தயாராம். அவர்கள் தயாராகத்தான் இருப்பார்கள். யுத்தத்தை நாங்கள் தொடங்கினால் உலக விளையாட்டில் 100 மீற்றர் ஓடினால் 9 செக்கன் பிடிக்கும். எங்களுக்கு 7 செக்கன் போதும். ஒட்டுசுட்டானில் நாங்கள் அடித்தபோது ஸ்ரீலங்கா கடற்படை ஈரப் பெரியகுளத்தில் ஓடிப்போய் நின்றது. அப்படிப்பட்ட வரலாறுகளை நாங்கள் நிகழ்த்திக் காட்டியிருக்கின்றோம். எங்களால் முடியும். ஒன்றரை லட்சம் துருப்புக்கள் இருக்கின்றன. ஸ்ரீலங்காவைப்பற்றி எள்ளளவும் சிந்திக்கவில்லை.

### உலக அங்கீகாரம் எமக்கு அவசியம்

எங்கள் விடுதலைப் போராட்டம் வெற்றியைப் பெற ஓர் உலக அங்கீகாரம் தேவை. அந்த அங்கீகாரத்தை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். உலக நாடுகள் அங்கீகாரம் வழங்கும் சூழல் மெல்ல மெல்ல உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்று இராணுவச் சமநிலையில் நிற்கின்றோம். ஓர் அடி அடித்தால் இராணுவ மேலாண்மைக்கு வந்துவிடுவோம். யாழ்ப்பாணத்தைச் சுற்றி 40 ஆயிரம் சிங்களப் படைகள் இருக்கின்றன.

யாழின் மொத்த சதுரப்பரப்பு 1,025 கிலோமீற்றர். 200 சதுர கிலோமீற்றர் எங்களிடம் இருக்கின்றது. 800 சதுரக் கிலோமீற்றரில் சிங்களப் படை இருக்கிறது. எனவே, யுத்தம் ஒன்று வந்தால் நிச்சயமாக இறுதி வெற்றி தமிழீழத்தை நோக்கி விரையும். தமிழீழத்தை நோக்கி அந்த யுத்தம் விரையும்போது எமது தேசம் விடியும். அந்த யுத்தம் யாழ்ப்பாணத்தை நோக்கி நகரும்போது உயிர் பிழைக்க வேண்டிய சிங்களப்படை பண்ணைப் பாலத்தினூடாகத் தீவுப்பகுதிக்குத்தான் ஓடிவரப் பார்க்கும். அப்போது நீங்கள் வழியைப் பார்த்தால் சரி.

இது தான் வரலாறு. இதனைத்தான் உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். யுத்தமா? சமாதானமா? முடிவு சந்திரிகாவின் கையில்தான் இருக்கிறது. எதையும் ஏற்றுக்கொண்டு எதையும் எதிர்கொள்ள உங்களுடைய விடுதலைப்புலிகள் இயக்கம் தயாரக இருக்கிறது. எனவே, பலம்தான் வாழ்க்கையை நிர்ணயிக்கும். விடுதலைப்புலிகளின் இராணுவப் பலத்தைப் பெருக்க வேண்டியது எங்களைப்போல் உங்களுடைய கடமை. அதை நீங்கள் செய்யும் பொழுது எங்களுடைய படைப்பலம் பெருகும். படைப்பலம் பெருகும்போது அது விடுதலை நோக்கி நகரும். படைகள் நகர்கின்றபோது தாயகம் விடியும். தொடர்வோம் மாவீரர் பணி. அடைவோம் தமிழீழம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் - என்றார். (க)

முற்றும்

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
## HAPPY BIRTHDAY



பிரான்பற்று பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி கிருஷ்ணலிங்கம்–கலையரசி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

செல்வன் கி.மகிந்தன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (27.05.2005) வெள்ளிக் கிழமை தனது அம்மா, அப்பா, அக்கா வுடன் சண்டிலிப்பாய் வீதி, பண்டத் தரிப்பிலுள்ள தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

செல்வன் மகிந்தனை பிரான்பற் றுப் பெரியவளவு முருகன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மனமார வாழ்த்துகின்றார்கள்.




லிங்கம் எலக்ரோனிக்ஸ்,
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

க.கிருஷ்ணலிங்கம்
[அப்பா]

(45811) (53-15-45)

# மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு கம்பன் கழகத்தினரால் 24-05-2005 இல் நடத்தப்பெற்ற கம்பன் விழாவில் மக்களுக்கு அயாரது அளப்பரிய சேவை ஆற்றியமைக்காகக் கௌரவிக்கப்பெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும் ஓய்வுபெற்று வீட்டு மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் யாழ்.மக்களுக்கு சேவையாற்றி வருபவருமான

## திருமதி சின்னப்பிள்ளை நாகேந்திரன்

அன்னையவர்கள் நீண்டகாலம் நலமுடன் வாழ்ந்து இன்னும் பல்வேறு சிறப்புக்களும் கௌரவங்களும் பட்டங்களும் பெறவேண்டுமென்று மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**திருமதி V.சிவசுப்பிரமணியம்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
**டாக்டர் S.சிவானந்தராஜா**
**டாக்டர் S.சுதர்சன் குடும்பத்தினர்**, கொழும்பு.
**டாக்டர் S.சிவபாலன் குடும்பத்தினர்**, தேவராணை வீதி, சுன்னாகம்.
V.S.**சிவரட்ணம்** (அரச. அரசசார்பற்ற வங்கி மதிப்பீட்டாளர்).
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

(சி-43045)(26-14-15)

SUBRA (14)
O/L Day Class
புதிய பிரிவுகள்
மின் ஒளியில்
01-06-2005
(புதன் மாலை 5.00)
- தினமும் மாலை 5 ~ 8.30 p.m.
- பாடத்திட்டம் பூர்த்திசெய்யப்படும்.
- அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
- எம்முடன் இணைந்தோர் வெற்றி பெறுவர்.

(சி-43012)

## பொறியியல் டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மே27

இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர் தேசியப் பொறியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு (எச்.என்.டி.ஈ.) மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த முழுநேர ஆங்கிலமொழியிலான கற்கை நெறி மூன்று வருட காலத்தை உள்ளடக்கியது. அத்துடன், ஆறுமாத கால வெளிக்களப் பயிற்சியையும் கொண்டது. இலத்திரனியல், மின்னியல். இயந்திரவியல், குடிசார் இயந்திரவியல் போன்ற விசேட பிரிவுகளையும் கொண்டது.

இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 2003 இற்கு முந்திய பழைய பாடத்திட்டமாயின் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிக வியல், இரசாயன வியல் ஆகிய பாடங் களிலும் -


ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 2003 இறகு முன் புதிய பாடத்திட்டமாயின் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களிலும் -

இவற்றுடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்திலும் சித்தியடைந்தவராகவும் 23 வயதுக்குட்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

இதற்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி அடுத்தமாதம் 24ஆம் திகதியாகும். (ஒ-13)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணோடு 17 - 05 - 1931



விண்ணோடு 27 - 05 - 1998

## அமரர் வைத்தியலிங்கம் கனகரெட்ணம்

(முன்னாள் சாரதி, யாழ்.மாநகரசபை)

திதி: 08-06-2005

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி - மோட்சலட்சுமி
மகன் - சதீஸ் (Finland)
மகள் - கமலினி
(நுண்கலைத்துறை மாணவி)

புங்கன்குளம்,
கச்சேரி கிழக்கு.
யாழ்ப்பாணம். (45711)(26-14-15)

## புங்குடுதீவில் கும்பாபிஷேகம

புங்குடுதீவு கிழக்கு 10ஆம் வட்டாரம் வீராமலை வயலூர் முருகமூர்த்தி கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் நவக்கிரகஹோமம் விசேட பூசைகள் நடைபெறும. நாளை சனிக்கிழமை காலை தொடக்கம் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (ஐ-204)

# உஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 03 - 09 - 1969



ஆண்டவன் அடியில் 19 - 05 - 2003

## அமரர் செல்லையா கிரிதரன் (மயூரன்)

திதி: சங்கடஹர சதுர்த்தி 27-05-2005

பாசம் மறக்கவில்லை நெஞ்சம்
எங்கள் விழியிலிருந்து மறையவில்லை!
உன் உருவம் ஆனால் எங்கள்
இதயத்தில் நீர் என்றும் நிலைத்திருப்பீர்
என்றும் உன்பிரிவால் வாடும்:

கரம்பொன் மேற்கு.
ஊர்காவற்றுறை.
(45820)(26-14-15)

தந்தை, சகோதரர்கள்.

பிரத்தியேக வகுப்பு
கணக்கீடு
திரு.பாலகஜன் Sat Sun
A/L-2006
பங்குடமைக் கணக்கு 3.30-4.30
உற்பத்திக் கணக்கு 4.30-5.30
A/L-2007
தனிவியாபார 5.30-6.30
முடிவுக் கணக்கு
Start : 28/05 - Sat
Beacon யாழ்
வெலிங்டன் சந்தியருகில்

# 10 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த **திரு. திருமதி ஞானலிங்கம்** தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி **அபிராமி (அபி)** தனது 10 ஆவது பிறந்த நாளை இன்று (27.05.2005) வெள்ளிக்கிழமை அச்சுவேலியிலுள்ள **'அபிராமிமஹாலில்'** வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். அபியை அன்பு அப்பா- அம்மா, பெரியண்ணா ஆதவன், சின்னண்ணா செந்தூரன், ஜீவாமச்சி, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பாமார்,சித்திமார், தம்பி, தங்கைமார், மச்சாள்மார், பாடசாலை நண்பிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் காட்டு மலைக்கந்தன் அருளால் பல கலையும் கற்று பல்லாண்டு வாழ்க! வாழ்க !! என வாழ்த்துகின்றனர்.

அன்புடன் வாழ்த்தும்:
திருமதி **ஜெ. மகாலிங்கம்**
(கொழும்புச்சித்தி)
மோதரை வீதி, கொழும்பு– 15



செல்வி அபிராமி (அபி)
27.05.2005

(C/43024)(51-15-34)

# கரம்பொன் ஊர் அன்னை வேளாங்கன்னி
## ஆலயப் திருவிழா



### அன்னையின் பக்த கோடிகளே !

அன்னையின் 2005 ஆம் வருட திருவிழா 22.05.2005 மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் செபமாலையும் திருப்பலியும் இடம் பெறும் 28 ஆம் திகதி மாலை திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் 29 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். வேளாங்கன்னித் தாயின் பக்தர்களே கொடூர இடம் பெயர்வுகளால் சிதறுண்டு இருக்கும் எங்களுக்கு அன்னையின் பருந்துரை குறைவின்றிக் கிடைக்கும்படியாகத் திருவிழா நிகழ்வுகளில் கலந்து செபிக்க அன்போடு அழைக்கின்றோம். தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். பூரண பாதுகாப்பு உண்டு. உதவிகள் செய்ய விரும்புவோர் பங்குத்தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்.

பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.

விளம்பர அனுசரணை:
**ACD Jaffna**

அர்ச். செபஸ்ரியார் ஆலயம்,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

(C-42980)(11-51)

## அரசு எம்மைத் திட்டமிட்டுப் புறக்கணிக்கிறது

# மாணவர்கள் கல்வியில் மேம்பாடடைய எதிர் நீச்சலுக்குத் தயாராக வேண்டும்

### கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவுறுத்து

ஒட்டுசுட்டான்,மே27

இலங்கை அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பால் எமது மாணவர்களின் கல்வி நிலை பின் தங்கிய நிலையில் இருக்கின்றது. இதனை உணர்ந்து எமது மாணவர்கள் எதிர் நீச்சலுக்குத் தயாராக வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன்.

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

கிளிநொச்சியில் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞான பாட மீட்டல் செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட மாணவர்களின் மத்தியில் கருத்துரையாடியபோதே கல்விக் கழகப் பொறுப்பாளர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் குறிப்பிட்டதாவது:-

தமிழர்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளை இலங்கை அரசு திட்டமிட்டுப் புறக்கணிக்கிறது. இதில் எமது கல்வி நிலை மிகவும் பாதிக்கப்பட்டுப் பின்தங்கியுள்ளது. இதிலிருந்து மீள்வதற்குப் பிறரை நாம் நம்பியிருக்கத் தேவையில்லை. இதனை எமது மாணவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அத்துடன் புறக்கணிப்பை எதிர்கொண்டு கல்வியில் மேம்பாடடைய எமது மாணவர்கள் எதிர்நீச்சல் போடத் தயாராக வேண்டும்.

இந்த விஞ்ஞானபாடமீட்டல் செயலமர்வின் ஊடாக மாணவர்கள் நம்பிக்கையுடன் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தவேண்டும். இதில் மனப்பூர்வமாக ஈடுபட்டால் வெற்றி நிச்சயம் கிட்டும் - என்றார் அவர்.

ஐந்து நாள்கள் இடம்பெற்ற இந்த மீட்டல் செயலமர்வில் தென்னிலங்கையிலிருந்து அழைக்கப்பட்ட எட்டுப்பேர் அடங்கிய வள அணியினர் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டனர். (ஓ-342-202)

## திருக்குறள் தமிழ் இலக்கியப் போட்டி

கிளிநொச்சி,மே27

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையே திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வினைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

மேற்படி சங்கத்தால் ஆண்டு தோறும் கொண்டாடப்படும் திருக்குறள் மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட தேர்வில் 4 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை, மேற்படி சங்கத்தால் நடத்தப்படும் மாணவர்களுக்கான கலைத்திறன், நாடகம், நாவன்மை, வினாவிடைப்போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறும் என்று சங்கத் தலைவர் வே.பரமநாதபிள்ளை தெரிவித்தார். (8-202)

## 'ஊக்கி' - பாடசாலை சஞ்சிகை வெளியீடு

புளியங்குளம், மே27

வவுனியா வடக்கு மதியாமடு விவேகானந்தா வித்தியாலயத்தின் 'ஊக்கி' சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் கி.சிவசோதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா வடக்குப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் இதழை வெளியிட கனகராயன் குளம் மகா வித்தியாலய அதிபர் மா.ஆனந்தகுமார் பெற்றுக்கொண்டார்.

விவேகானந்த வித்தியாலய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்கள் 'ஊக்கி' சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன. கணிதம், விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பொது அறிவு எனப் பல்வேறு வகை விடயங்களும் இதில் அடங்கியுள்ளன. வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் வெளிவரும் பாடசாலைச் சஞ்சிகை இது மட்டுமே ஆகும். இவ்வாறு அதிபர் கி.சிவசோதி தெரிவித்தார். (ஓ-355)

## கல்வி மேம்பாடு தொடர்பாக முல்லைத்தீவில் கலந்துரையாடல்

அளம்பில்,மே27

முல்லைத்தீவு மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை பிரதேச மட்டத்திலான கலந்துரையாடல்களை நடத்த உள்ளது. இக்கலந்துரையாடலில் கல்வி மேம்பாடு, யதார்த்தபூர்வ செயற்பாடுகள் ஆகியவை குறித்து ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலும், மறுநாள் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

அடுத்தமாதம் முதலாம் திகதி உடையார்கட்டு மகாவித்தியாலயத்திலும் 6 ஆம் திகதி கொக்குளாய் அ.த.க.பாடசாலையிலும், 7 ஆம் திகதி அளம்பில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் இக்கலந்துரையாடல் இடம்பெறும். மேற்குறிப்பிட்ட தினங்களில் நண்பகல் 12.30 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறும் என்றும் -

இன்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம்பெறவிருந்த கலந்துரையாடல் வேறொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-416)

## ஐந்து மாதங்களின் பின்னரே இலவச பாடநூல்கள் கிடைத்தன

அளம்பில்,மே27

பாடசாலை ஆரம்பித்து ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் தற்போதுதான் முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்கு இலவசப் பாடநூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. முல்லைத்தீவு மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

தரம் 7வகுப்பில் வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுக்கான பாடநூல்கள் தற்போதுதான் முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. பாடசாலைகளில் முதலாம் தவணை முடிவடைய உள்ளது. பாடசாலைகள் ஆரம்பித்து 5மாதகாலமாகிறது. இப்போதுதான் இலவசப் பாடநூல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

அதிலும் ஒவ்வொரு பாடநூலிலும் கணிசமான எழுத்துப்பிழைகளும் சொற்பிழைகளும் உள்ளன. தென்பகுதிச் சிங்களப் பாடசாலைகளுக்கு முன்கூட்டியே பாடநூல்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், தமிழ் மாணவர்கள் இந்த விடயத்திலும் காலங்காலமாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள்- என்றார் அவர். (ஓ-416)

## சதுரங்கப் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு, மே27

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் மாகாண மட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் 15 வயது, 19 வயது ஆகிய இருபிரிவுகளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆண்கள் அணியினர் வெற்றியீட்டியுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கல்வி வலய கேட்போர் கூடத்தில் இந்த இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன.

சதுரங்க இறுதிப் போட்டிகளில் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு ஆண்கள்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வேலணை மேற்கு நடராசாவித்தியாலயம்.

**15 வயதுப் பிரிவு பெண்கள்**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு ஆண்கள்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு பெண்கள்**

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி . (ஓ-152)

## இலங்கை அணியின் பயிற்சியாளர்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டொம் மூடி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான ஒப்பந்தம் கடந்த புதன்கிழமை கையெழுத்தானது.

2007ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பை போட்டிவரை, 2ஆண்டுகளுக்கு அவர் பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். முன்னதாக அவர் இந்திய அணியின் பயிற்சியாளராவார் என்று எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## தாச்சிப்போட்டி இறுதியாட்டம்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தி வரும் மாவட்ட மட்டத்திலான தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்திலே யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் க.ஆனந்தஜெஸ்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரான றோகான் இராஜசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

அன்றையதினம் மூன்றாமிடத்துக்கான போட்டியில் மயிலிட்டி ஜெயந்தன் விளையாட்டுக்கழக அணியும், சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக அணியும் மோத இருக்கின்றன. இறுதியாட்டத்தில் தாவடி ஸ்ரீ காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியும், இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழக அணியும் மோத இருக்கின்றன. (ஓ-75)




தமிழீழ எழுச்சி நாளையொட்டி யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் பாடசாலை அணிகளுக்கிடையேயான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 17வயதுக்குட்பட்டோர் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணியும் வேம்படி மகளிர் கல்லூரி அணியும் ஆட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: கவிதரன்)

## ஜொலிஸ்ரார் கிரிக்கெட் போட்டி அரையிறுதிக்கு யங்ஸ்ரார் தகுதி

யாழ்ப்பாணம்,மே27

எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது கால் இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த திங்கட்கிழமை காலை 9மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கிறாஸ்கொப்பஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சகல விக்கெட்டினையும் இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுஜீவன் 80 ஓட்டங்களைப் பெற்றார். விஜிதரன் 42 ஓட்டங்களையும் றஜீத் 22 ஓட்டங்களையும் விஜயகர்ணன் 21ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிறாஸ் கொப்பஸ் அணி வீரர்கள் தீலிபன் 5.4 ஓவர் பந்து வீசி 46 ஓட்டங்களினைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும், அங்சுதன் 6 ஓவர் பந்து வீசி 51 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், ராஜகாந்தன் 6ஓவர் பந்து வீசி 55 ஓட்டங்களினைக் கொடுத்து 2விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பஸ் அணியினர் 30 ஓவர்களின் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் எஸ்.மயூரன் 46 ஓட்டங்களினையும், தர்ஷன். 32 ஓட்டங்களினையும், பிரகவதன் 16 ஓட்டங்களினையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரர்களான சுஜீவன் 5ஓவர் பந்து வீசி 28 ஓட்டங்களினைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் ஜோனிற்றஸ் 3ஓவர் பந்து வீசி 9 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட் டினையும், ரஜீத் ஆறு ஓவர் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும், விஜயகர்ணன் 3ஓவர் பந்துவீசி 12 ஓட்டங்களினைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 116 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.(ஓ-86-190)

## பெண்களுக்கான உதைபந்தாட்டம்

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் நடத்தப்பட்டுவரும் போட்டிகளில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (3-190)

விளையாட்டு

## பிரதேச உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

கரவெட்டி,மே27

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளின் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வேலணைப் பிரதேச செயலக அணி, கரவெட்டி பிரதேச செயலக அணி ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வேலணைப் பிரதேச செயலக அணியினரை எதிர்த்து மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு அணி மோதியது.

வேலணைப் பிரதேச செயலக அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு அணியை வெற்றி கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு அணி மோதியது.

கரவெட்டிப் பிரதேச செயலக அணி 5:2 என்ற கோல் கணக்கில் ஊர்காவற்றுறை உதவி அரச பிரிவு அணியை வெற்றிகொண்டது.

மறுநாள் நடந்த ஆட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 5:0 என்ற கோல்கணக்கில் காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு அணியை வெற்றிகொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

கோப்பாய் பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல்கணக்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டது.(3-70-190)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979 ஆம் ஆண்டு பிறந்த, சுவாதி நட்சத்திரம், நான்காம் பாதம் உடைய, பிரான்ஸில் வதிவிட உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த, அழகான, மெல்லிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். தொடர்பு: 021 4591793. (45677)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, MBBS டாக்டர் உயரம் 5' 10" நிறமான மணமகனுக்கு 36 வயதிற்கு உட் பட்ட MBBS டாக்டர் உயர்மான மணமகள் தேவை தொடர்பு: 021 222 3859. (45795)

இந்து கௌரவ குடும்பம் சொந்தத் தொழிலும் முதுசமும் உள்ள 47 வயது விவாகரத்து பெற்றவருக்கு தகுந்த பெண் தேவை. திருமணமாகாதவர்கள் , விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் விரும்பத்தக்கது. சாதகம் மற்றும் சகல விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். மே.பா உதயன் 2601. (45869)

## மணமகன் தேவை

கொழும்பைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, Accountent நிறமான 5'10" உயரமான 31 வயதான விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: 021 222 3859. (45796)

## இறைச்சிக்கோழிகள் தேவை

புறொயிலர், கல்பேட், இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (45859)

## தவறிவிட்டது

உடுப்பிட்டி போக்காலை வீதியைச் சேர்ந்த, திருமதி சந்திராதேவி சிவம் என்பவருடைய யாழ். ஆஸ்பத்திரி கிளினிக் பதிவுக்கொப்பி 25.05.2005 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரிக்கும் பூபால சிங்கம் புத்தகசாலைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.மாநகரசபைச் செயலகத்தில் இறைவரிப் பகுதியைச் சேர்ந்த சிவம் என்பவரிடம் ஒப்படைத்துதவவும். (45845)

## வாடகைக்கு

மாநகரசபை எல்லைக்குள் பிரபல பாடசாலைகளுக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீட்டிற்கு அனெக்ஸ் முறையில் குடியிருக்க சிறிய அரச ஊழியரைக் கொண்ட குடும்பம் உடன் தேவை. தொலைபேசி இல. 077 6401722. (45837)

## விற்பனைக்கு

வீடியோ நிலையமொன்றிற்கு ஏற்ற ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் படக்கொப்பிகள் மற்றும் தமிழ்ப்பட CDக்களும் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 734339.

(21-15-34) (சி-43008)

## புங்கன்குளத்தில் தீ மிதிப்பு

புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழாவும், அம்பாள் ஆலயத்திற்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குளம் பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தீ மிதிப்பு தெய்வீக நிகழ்வும் இன்று நடைபெற வுள்ளன.

முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகும் விசேட அபிசேகத்தைத் தொடர்ந்து மதியம் அன்னதான நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து இரவு நிகழ்வுகளாக விசேட அபிசேகப் பொங்கல், தீ மிதிப்பு ஆகிய இடம்பெறவுள்ளன.

விசேட நிகழ்வுகளாக யாழ். ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் வில்லிசை நிகழ்வு, பஜனை என்பன நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (ஜ -12)

---


## திருமணக்கார்



- ஜப்பான் தயாரிப்பு நிசான்சனி, நீளமான நிறைவான கார் குளிரூட்டப்பட்டது
- சுற்றுலாக்களுக்கும் சுபகாரியங்களுக்கும் வாடகைக்குண்டு.

ஒழுங்கு செய்பவர்களுக்கு டயலொக் சிமிகார்ட் ஒன்று இனாமாக வழங்கப்படும்.

- அலங்காரம். சாரதி என்பன இலசவசம். 0777 283795.

---

உ

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை ,வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன், இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி** (அரசடி வீதி), **யாழ்ப்பாணம்.**

(45807)(33-26-11-15) T.P.: 021 2225680, 0776 923623.

---

மிகக்குறைந்த விலையில்

## நல்லூரில் தொடர்மாடி வீடுகள்

- மேற்படி திட்டத்தில் மொத்தமாக 8 வீடுகள் மட்டுமே அமையவுள்ளன
- Tiles பதிக்கப்பட்ட ஆடம்பர வீடுகள்
- தனித்தனி மின்சார, தண்ணீர் வசதிகள்
- 4 தவணைகளில் இலகுக் கொடுப்பனவு
- சட்டபூர்வமான உறுதியான உறுதிப்பத்திரங்கள்

## தயா ஏஜென்சி

(C/43049)(21-11-15)

இல.3,நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி தொடர்பு இரவு 7 மணிக்குப் பின் 0777 283795

---

## பதவி வெற்றிடம்

நெல்லியடி செலிங்கோ ஆயுட்காப்புறுதிக் கம்பனிக்கு விற்பனை ஆலோசகர்களுக்கான விண்ணப்பம் கோரல்

1. வயது எல்லை - 18 வயதிற்கு மேல் (ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்)
2. G.C.E (A/L) - சித்தி
3. G.C.E (O/L) - கணிதம் உட்பட போடங்கள் சித்தி
4. உடுப்பிட்டி, தொண்டைமானாறு, நெல்லியடி,கரவெட்டி, புலோலி, பருத்தித்துறை,அம்பன், குடத்தனை, வல்வெட்டித் துறை, கொடிகாமம், வரணி, மிருசுவில், உசன், மீசாலை ஆகிய இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

விண்ணப்பம் சேரவேண்டிய முகவரி:-

செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி [ஆயுள் பகுதி] [கார்த்திகேசு பில்டிங்], நெல்லியடி, கரவெட்டி.

விண்ணப்ப முடிவு திகதி :- 02-06-2005

(C/43048)(46-21-11-15)


---

## திறப்பு விழா

**C.T.S. யாழ். இணைக் கல்வித்திட்டம்**

கொழும்பு இறையியல் கல்லூரியின், அதிபர் தலைமையில் எதிர்வரும் 30.05.2005 மாலை 5.30 மணிக்கு யாழ். கல்வி நிலையம் வைபவ ரீதியான திறப்பு விழா நடைபெறும்.

இடம்: 32/1, விதானையார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். - இணைப்பாளர், C.T.S யாழ். நிலையம்

---

**C.T.S. யாழ். இணைக்கல்வித்திட்டம்**

பாடம்: வேதாகம அறநெறி
விரிவுரையாளர்: நெ.பத்மநாதன் (M.Th இங்கிலாந்து)
காலம்: 30.05.2005 - 03.06.2005 வரை
நேரம்: காலை 9 மணி
இடம் C.T.S.யாழ்.நிலையம், இல.32/1,விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.

- இணைப்பாளர், C.T.S யாழ். நிலையம்

(45848)(21-11-14)

---

## பதவி வெற்றிடம்

**காரியாலய உத்தியோகத்தர் (Office Staff)**

**(Walk - in - Interview)**

யாழ். நகரில் இயங்கும் கிறிஸ்தவ கல்வி நிலையத்திற்கு ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் பணியாற்றக்கூடிய 18 இற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட கிறிஸ்தவ ஆண்கள் இப்பதவியை நிரப்ப நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

கல்வித் தகைமை: க.பொ.த (உ/த)

திருச்சபைப் போதகரினது சிபாரிசு கட்டாயமானது.

எதிர்வரும் 31.05.2005 அன்று 462, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'கிறிஸ்துவிற்காக இளைஞர்' ஸ்தாபனத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணிவரை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்கவும்.

- இணைப்பாளர், C.T.S யாழ். நிலையம்

(45848)(21-11-14)

---

## மீளாத்துயரம்



மறைந்த முன்னாள் புகைப்படக் கலை வித்தகர்

**மாணிக்கத்தம்பி**

அவர்களின் புதல்வரும் புகைப்படத்துறையில் எமது ஆசானுமாகிய

**பிலிப் நிக்கிலஸ் மாணிக்கத்தம்பி**

அவர்களின் மறை[illegible]திகேட்டு நாம் மீளாத்[illegible]ளோம்.

அவர்களின் குடும்பத்தினரின் துக்க[illegible]ல் நாமும் பங்கெடுத்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S.T அரசர் - N.இராசரெட்ணம், பேபி போட்டோ (ஊழியர்கள்)

பலாலி றோட், திருநெல்வேலி. T.P. 222 6912

(45860)(32-21-11-15)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1931 - 10 - 17 | 2005 - 04 - 27 |

**அமரர் தம்பிப்பிள்ளை கந்தையா [ஆனந்தம்]**

அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இன்று [27.05.2005] வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அரியாலை யூதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குபற்றி அன்னாரது ஆன்ம சாந்திக்காக செபிப்பதுடன் இன்று நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி: முள்ளி வீதி, அரியாலை,


தற்காலிக முகவரி: அருளம்பலம் வீதி, அரியாலை.

S.தனபாலசிங்கம் (மருமகன்)

(45822)(21-11-15)

---

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 - 01 - 1954 | 07 - 06 - 1993 |

**திருமதி நகுலராஜா நகுலேஸ்வரி**

(அம்பன், குடத்தனை)

திதி: சதுர்த்தி 27.05.2005

அன்பான எம் உறவே
ஆண்டுகள் பன்னிரண்டு
அலைபோல் ஓடி
மறைந்தாலும் ஆறாத
உங்கள் நினைவை
சுமந்து தொடர்கிறோம்
எம் வாழ்வுதனை....
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

நகுலேஸ்வரி தொலைத்தொடர்பகம், அம்பன், குடத்தனை.
ராஜன் ஹாட்வெயர், பிரதான வீதி, பருத்தித்துறை.

-குடும்பத்தினர்.

(45865) (32-21-11-15)

---

## ஈராண்டு நினைவலையில்...



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 - 10 - 1939 | 19 - 05 - 2003 |

**திருமதி மகேஸ்வரி வீரகத்தி**

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/ குடமியன் அ.த.க. பாடசாலை)

[திதி : அபரபட்சத்து சங்கடஹர சதுர்த்தி]

பார் போற்ற எம்மவரைப் பக்குவமாய் உயர்த்தி விட்டு
ஓரான் ஊர்தேடி ஓய்வு பெற்றுச் சென்றீர் அம்மா !
ஈராண்டு இங்கு இருபதாண்டு போல் நீண்டே
தீராத கவலையிலே திளைக்கிறோம் நாம் தந்தையுடன் !

"குமரகிரி" குடமியன், வரணி.

-குடும்பத்தினர்.

(45818)(51-)





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) உரையாற்றுவதையும் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சிரேஷ்ட விரிவுரையாளர் வே.கா.கணபதிப்பிள்ளை, முத்தமிழ் மன்றத் தலைவர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் விழாவில் இடம்பெற்ற ஆசிரிய மாணவிகளின் நடன நிகழ்வையும் படங்களில் காணலாம். (8)

# கட்டைபறிச்சான் காவலரண் முன் மூதூர் மக்கள் ஆர்ப்பாட்டம்

மூதூர்,மே27

மூதூரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குப் பொருள்களை எடுத்துச்செல்வதற்குப் படையினர் கட்டுப்பாடு விதித்திருப்பதை ஆட்சேபித்து மூதூர் கிழக்குப் பகுதி மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

சுமார் மூவாயிரம் மக்கள் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் ஒன்று திரண்டு பேரணியாக கட்டைபறிச்சான் இராணுவச் சாவடி முன்னரங்கக் காவலரண் வரைசென்று கோஷம் எழுப்பினர்.

சிமெந்து, பெற்றோல், பற்றரி உட்பட பல பொருள்களை மக்கள் கட்டைபறிச்சான் இராணுவ சோதனைச் சாவடி ஊடாக மூதூர் கிழக்குப் பகுதிக்குக்கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைக் கண்டித்தே மக்கள் பேரணியாகச் சென்று வீதியில் அமர்ந்து கோஷம் எழுப்பினர்.

மூதூர் கிழக்குப் பிரதேசத்திற்கான பொருளாதாரத்தடை நீக்கப்பட்டிருப்பதாக இரு வாரங்களுக்கு முன்னர் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அவை இன்று வரை அமுல்படுத்தப்படவில்லை என அதிருப்தி வெளியிட்டுள்ள நிலையிலேயே மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

அதையடுத்து அவ்விடத்துக்கு வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மற்றும் மூதூர் பிரதேச செயலாளர் நியாஸ், கட்டைபறிச்சான் இராணுவ பொறுப்பதிகாரி, பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் மக்களின் பிரச்சினையைக் கேட்டறிந்தனர்.

அங்கு காரசாரமான விவாதம் ஒரு மணி நேரம் வரை இடம்பெற்றது.

பொருளாதாரத் தடைநீக்கப்படாதுவிட்டால் தாம் வேறுவழிமுறைகளை நாடவேண்டிவருமெனவும் அத்துடன், தமது போராட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.

பிற்பகல் 12.50 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

(க)

வடக்கு- கிழக்கில் உள்ள

# தபால் நிலைய அபிவிருத்தி குறித்து அமைச்சர் தலைமையில் கூட்டம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தபால் நிலையங்களின் அபிவிருத்தி தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் தபால் தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜெயரத்தினா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் உள்ள தபால் நிலையங்களின் எதிர்கால அபிவிருத்தி, வசதிநிலைகள் மற்றும் ஆளணி தொடர்பாகவும்-தபால்சேவையை நவீனமயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் திட்டமிடுவதற்காக இக்கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற கட்டடத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட தபால் அத்தியட்சகர்கள் மற்றும் மாகாணங்களுக்கு பொறுப்பான பிரதி அஞ்சல்மா அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

தற்போது வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அஞ்சல் அலுவலகங்களின் கட்டட வசதிகள், ஆளணிப்பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக அமைச்சர் எம்.டி. ஜெயரத்தினா அப்போது அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வசதிகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆலோசனையும் சிபார்சுகளையும் அமைச்சர் கேட்டறிந்தார். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புதிய கட்டடங்கள் அமைக்க வேண்டிய தபால் நிலையங்களின் விவரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அறிக்கைகளை மாவட்ட ரீதியாக சமர்ப்பிக்குமாறு மாவட்டங்களுக்குப் பொறுப்பான அஞ்சல் அத்தியட்சகர்களுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

கலந்துரையாடலின் மூலம் வடக்கு- கிழக்கு பிராந்தியத்தில் பல தபால் நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டடங்கள் மற்றும் தபால் சேவையின் தரம் உயர சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாக கலந்துரையாடலில் கலந்துகொண்ட தபால் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(ஒ-11)

# சிறைகள் இல்லை

# சீர்திருத்தப் பள்ளிகளே உள்ளன

## தமிழீழ காவல்துறையின் துணைப் பொறுப்பாளர் சி.மாதவன்

**தமிழீழ காவல்துறையின் துணைப் பொறுப்பாளர் சி.மாதவன் உதயனுக்கு வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.**

❑ கேள்வி: தமிழீழ காவல்துறையின் செயற்பாடு பற்றிக்கூறுவீர்களா?

○ பதில்: எமது மக்கள் தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனமான சிந்தனையை ஏற்றவர்கள். அவரால் உருவாக்கப்பட்ட எமது காவல் துறையையும் மக்கள் ஏற்றுள்ளனர். எமது காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனின் நெறிப்படுத்தலிலும் மக்களின் பூரண ஒத்துழைப்புடனும் எமது துறை சிறப்பாகச் செயற்படுகின்றது.

எமது செயற்பாடு பற்றி நாங்கள் கூறுவதைவிட ஏனைய இடங்களில் எமது நடவடிக்கைகளை முன்னுதாரணமாகக் காட்டுவதைக் கொண்டே அறியலாம்.

❑ கேள்வி: புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் குற்றச்செயல்களின் வீதம் எவ்வாறுள்ளது?

○ பதில்: புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் எமது பிரதேசத்தில் குற்றச்செயல்கள் குறைந்துவிட்டதென்றே சொல்லலாம். அதாவது, ஒப்பந்தத்திற்கு முன்னர் அநேகமானோர் வேலை வாய்ப்பின்றி இருந்தார்கள். இதனால், அவர்கள் என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் குற்றச்செயல்களில் அதிகமாக ஈடுபட்டார்கள்.

ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் வேலை வாய்ப்புகள் ஏற்பட்டன. இதனால், குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தொகை குறைந்ததுடன் குற்றச்செயல்களும் குறைந்தன. சிறுசிறு குற்றங்கள் ஆங்காங்கே நடைபெறுகின்றனதான் ஆயினும் தற்போதைய நிலையில் வீதி விபத்துக்கள்தான் அதிகரித்துள்ளன. 'ஏ-9' பாதை திறந்த பின் போக்குவரத்தில் ஈடுபடுவோர் - வாகனப் போக்குவரத்தில் ஈடுபடுவோர் - அதிகரித்துள்ளனர். இதனால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பிரதேச ரீதியாக மக்களுக்கு வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு கருத்தூட்டல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றோம்.

வேகக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

❑ கேள்வி: மனித உரிமை தொடர்பான நடவடிக்கை பற்றி...?

○ பதில்: எமது விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதே எமது அடிப்படை மனித உரிமை மறுக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டமையாலுமே. ஆகையால் எமது தேசியத் தலைவர் எமது மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம், கௌரவம் என்பவை மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இயக்கத்தில் பல கட்டமைப்புக்களை உருவாக்கினார். உதாரணமாக காவல்துறை, நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மனித உரிமை அமைப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அத்துடன், எமது பகுதியில் வந்து பல



மனித உரிமை அமைப்புகளும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் எமது கட்டமைப்புகளைப் பார்த்து பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளன.

❑ கேள்வி: சுனாமி அனர்த்தத்தால் தங்கள் துறைக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிக் கூறமுடியுமா?

சுனாமியால் எம்மைவிட எமது மக்களுக்குத்தான் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்தகாலப் போரினால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைவிட இது மிக மோசமானது.

எமது துறையில ஒரு பொறுப்பாளரை யும் 2 உறுப்பினர்களை யும் இழந்துள்ளோம்.

❑ கேள்வி: உங்கள் துறையை சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் நோக்கம் உண்டா?

○ பதில்: எங்களின் நடவடிக்கைகள், கட்டமைப்பு என்பன எமது மக்களும அங்கீகரிக்கக் கூடியதாகவே அமைந்துள்ளன. சட்டதிட்டங்களும் அவ்வாறே அமைந்துள்ளன.

இப்பொழுதே நாம் ஏனைய நாடுகளின் துறைகளோடு சரிசமனாகவே நிற்கின்றோம். ஏனைய நாடுகளிலுள்ள பொருளாதார வசதிகள் எம்மிடம் இல்லாமல் இருக்கலாம் ஆனால், நாம் எமது அதி உச்சமான மனித வலுவைக்கொண்டு செயற்பட்டு வருகின்றோம். எமது அடிப்படைக்கட்டுமானங்கள் மக்களுக்குத் திருப்தியாகவே உள்ளன. சில வேளைகளில் ஆளணிப் பற்றாக்குறை நிலவினாலும் எமது சேவையில் மக்கள் திருப்தியாக உள்ளனர் என்றே நம்புகின்றோம்.

❑ கேள்வி: சிறுவர் குற்றச்செயல் தொடர்பாகத் தமிழீழக் காவல்துறை மேற்கொள்ளும் நடவடிக்கை குறித்து..?

○ பதில்: ஏனைய நாடுகளிலுள்ளது போல் வசதிகள் இல்லாதுவிடினும் அவர்களை எம்மால் இயன்றவரை நல்வழிப்படுத்த துறைசார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் சிறைக்கூடங்கள் எம்மிடமில்லை. மாறாக சீர்திருத்தப்பள்ளிகள்தான் இருக்கின்றன.

சிறுவர்கள் இந்த நாட்டின் சிற்பிகள். அவர்கள் தாயகத்தைக் கட்டியெழுப்பும் தூண்கள். சிறுவர்கள் எம்மைப் பொறுத்தவரை குற்றச்செயல்களில் ஈடுபடுவது மிகமிகக் குறைவே. எமது தேசத்தில் உள்ள மக்கள் போராட்டத்தின்பால் மிக பற்றுக்கொண்டவர்கள். அதனால் அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவதில்லை. மாறாக ஒரு சிலர் குற்றம் செய்யும்போதும் அவர்களை நல்வழிப்படுத்த நாங்கள் சிறப்பு வழிகாட்டல் நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

❑ கேள்வி: உங்கள் தடுப்பு முகாம்களில் எத்தகைய கைதிகள் உள்ளனர்?

○ பதில்: எங்களிடம் தடுப்பு முகாம் சிறைக்கூடம் என்று இல்லை. சீர்திருத்தப் பள்ளிகள்தான் உள்ளன. இங்கு பலதரப்பட்டவர்களும் இருப்பார்கள். அவர்களை அவர்கள் செய்த குற்றச்செயல்களின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தி வைத்திருக்கின்றோம். அவர்கள் கௌரவமாகவும், கண்ணியமாகவும் நடத்தப்படுகின்றார்கள்.

அண்மையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் எமது சீர்திருத்தப்பள்ளியை நேரில் வந்து பார்வையிட்டனர். பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் வந்து பார்வையிட்டன.

**செவ்விகண்டவர்:**
**ந.விக்னேஸ்வரன்**
**புதுக்குடியிருப்புச் செய்தியாளர்**

❑ கேள்வி: நீங்கள் மக்களுக்குச் சொல்ல விரும்புவது?

○ பதில்: தலைவரின் தீர்க்கதரிசன சிந்தனைக்கு வடிவம் கொடுத்தவர்கள் எமது பொறுப்பாளரும் போராளிகளும பல இடர்களுக்கு முகம கொடுத்து எமது துறையை வளர்த்த தலைமைக்கும் ஒத்துழைப்புக் கொடுத்த மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். இனியும் பூரண ஒத்துழைப்புத் தருவார்கள் என நம்புகின்றேன். ★

# வெசாக் கால விபத்துகளில் இருவர் பலி; 28 பேர் காயம்!

கொழும்பு,மே27

வெசாக் அலங்காரங்களைக் கண்டுகளிக்கச் சென்றபோது இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் இருவர் பலியாகியுள்ளனர். 28 பேர் படுகாயமுற்றுள்ளனர்.

முக்கிய விபத்து ஒன்று புதன்கிழமை அதிகாலை மூன்று மணியளவில் பதுருலிய நாகொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. வான் ஒன்றில் வெசாக் தோரணங்களைக் கண்டுகளிக்கச் சென்றவர்களின் வான் வீதியோரத்தில் உள்ள மரமொன்றில் மோதியுள்ளது. வானைச் செலுத்திச் சென்ற சாரதி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். வானில் பயணித்த 19 பேர் காயமுற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துக்கு வாகனத்தின் எல்லை மீறிய வேகமே காரணம் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் அதிகாலை ஆனைமடுவப் பகுதியில் வெசாக் தோரணங்களைக் கண்டுகளிக்க மோட்டார் சைக்கிளில் சென்ற நபரொருவர் எதிரே வந்த லொறியில் மோதியதால் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிள் அதிவேகமாகச் சென்றதாலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரியில் இருந்து பதுளை நோக்கிச் சென்ற வானொன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததால் அதில் பயணஞ்செய்த ஒன்பது பேர் காயமுற்றுள்ளனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-க)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் ஆறுமுகம் இராஜகோபால்

(செம்பியன்செல்வன்)


எமது கல்லூரியின்பழைய மாணவரும், முன்னாள் ஆசிரியரும் புகழ் பூத்த இலக்கியப் படைப்பாளியுமாக விளங்கிய அமரர் ஆறுமுகம் இராஜகோபால் அவர்கள் 20.05.2005 காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் இழப்பினால் ஆறாத்துயர் கொண்டிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(45873)(42-11-45)

## மரண அறிவித்தல்



### மாணிக்கத்தம்பி பிலிப் நிக்கலஸ்

**வளன்புரம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் செல்லம்ஸ் ஸ்ரூடியோ (யாழ்ப்பாணம்) உரிமையாளரும், பிரித்தானியப் படைப்பிரிவில் கடமையாற்றியவருமாகிய பிலிப் நிக்கலஸ் 23-05-2005 திங்கட்கிழமையன்று காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற பிலிப் மாணிக்கத்தம்பி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் லில்லிமலரின் அன்புக் கணவரும் மரியஸ்ரெலா (Canada), மரிய நிர்மலா தெய்வேந்திரா (ஆசிரியை / திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), மரியராஜினி (Canada), ஜோய் ஜெயக்குமார் (வீரகேசரி / ஆசிரிய பீடம்), மரிய சாந்தினி (Norway), தயாளன் ராஜ்குமார் (France), றொபேர்ட் ரவீந்திரகுமார் (Norway), மரியவதனி (Norway) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தார்சீசியஸ் (Canada), காலஞ்சென்ற தெய்வேந்திரா, அலோசியஸ் (Canada), வசந்தி (வீரகேசரி / ஆசிரிய பீடம்), செபஸ்ரியன் (Norway), ஸ்ரெலா (France), பென்த்த (Norway), பயஸ் (Norway) ஆகியோரின் அருமை மாமனாரும் ஜெரால்ட் (Ottawa University, Canada), தர்ஷினி(Glaxo Ltd, Canada), லக்ஸ்மன் (Engineering Faculty, Moratuwa University), சிந்துஜா (Medical Faculty, Kingston University, London) மற்றும் பிரான்ஸைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன், தமிழ்வேந்தன். நோர்வேயைச் சேர்ந்த சீமோன், சுசானா, மரியானா, றொபின், றோகர், றோய், திரேசன், லில்லியன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.**

**அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.05.2005) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்புத்துறை புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்:
**என்.ஜோய் ஜெயக்குமார்.**
9-3/3, மெரிகோல்ட் அப்பாட்மென்ற்
அல்விஸ் பிளேஸ்,
கொழும்பு - 13.
Tel.: 2338870

"மலரகம்"
வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(45864)(24-42-11-45)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பணி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,மே27

யாழ்வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கு வலயக கல்வி அலுவலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கில மொழியில் 'டீ' அல்லது 'ஏ' தரத்தில் சித்தியும் பெற்றோர் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோரை தமது சுயவிரங்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறும் -

தெரிவுகள் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வுமூலம் மேற்கொள்ளப்படும் என்றும் -

யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செலவரட்ணம் தெரிவித்துள்ளார்.

(ஒ-202)

## ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக் குழுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மே 27

திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருந்த இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் நடைபெறும் திகதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

(ஒ-13)

## நாடக நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மே27

'வானில் மிதந்த வள்ளுவர் வாய்மொழி' என்னும் நாடக நூல் வெளியீட்டு விழா நாளை சனிககிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில கந்தசாமி கோயில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தநூலை சோ.பரமசாமி எழுதியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத் துவத்துறை விரிவுரையாளர் கலாநிதி பொன். இராமநாதன் நூல் வெளியீட்டுரையாற்றி நூலை வெளியிட்டு வைப்பார்.

நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசாவும், இணைப்பிரதியை யாழ் மக்கள் வங்கியின் வட பிராந்திய உதவி முகாமையாளர் அருகதாசனும் பெற்றுக் கொள்வர்.

நிகழ்வில் வாழ்த்துரையை வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் சிவ.சரவணபவனும், ஆய்வுரையை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலமும் நயப்புரையை இளவாலை மெய்கண்டான் வித்தியாலய முன்னாள் அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரையும் நிகழ்த்துவர். (8-203)

## அதிபர்களுக்கான செயலமர்வு

பருத்தித்துறை,மே27

வடமராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 30ஆம் திகதி பிற் பகல் 2.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(8-118-202)


## பொதி செய்ய பெண் பிள்ளைகள் தேவை

முன்பு தொழிலகங்களில் பொதிகள் செய்து அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. கிராம சேவகர் அல்லது தொழிலதிபர் சிபாரிசுக் கடிதத்துடன் நேரில் வரவும். திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். G.C.E. (OL) படித்தவர்கள் விரும்பத்தக்கது.

**சிவா நறுமணப் பூங்கா,**
288,ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
T.P.No: 021 222 2567

(சி/43053)(24-42-11-45)


## இருபத்தியேழாவது பிறந்தநாளில் நீங்காத நினைவுடன்



### வீரவேங்கை மன்னன்
### லோகநாதன் கோகுலன் / கவாஸ்கர்

தாயின் மடியில் 27-05-1978
தாயக மண்ணில் 14-07-1995

உற்றாரின் சுற்றாரின் ஏக்கங்கள் தீர
பெற்றோரின் உள்ளமது பாசத்தில் மலர
இந்நாளை பொன்னாளாய் மாற்றிடவே நீயிங்கு
நற்றருணம் பார்த்து நம் தரணியிதைத் தொட்டாய்

உன் வரவால் உறவுகள் மகிழ்ந்திருக்க
உன் உயர்வுகள் பலவெண்ணிக் களித்திருக்க
தாய்நாடு காக்கவென்று தலைவன் வழி சென்று
தன்னையே தந்து நீ தரணியெங்கும் நிறைந்தாய்

நீ மறைந்து ஈரைந்து வருடங்கள் கடந்தாலும்
உன் வரவும் உன் நினைவும் அழியாது எம் நெஞ்சில்
அன்றுபோல் இன்றும் நீ உதித்த திருநாள்
உன் பொன்முகம் கண்டு நாம் மனம் மகிழ்ந்த நன்னாள்
இந்நாளைக் கொண்டாட நீயில்லை என்றாலும்
இறைவன் அடி போற்றி உன் மோட்சம் வேண்டுகிறோம்.

உன் நினைவுடன்
அப்பா, அம்மா, அக்காமார்,
அத்தான்மார், மருமக்கள்.

கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(45862)(24-42-11-45)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12 - 04 - 1934



மறைவு
27 - 04 - 2005

### திருமதி சண்முகம் புவனேஸ்வரி

(சந்தவளவு, சுன்னாகம்)

வாழ்வில் வழிகாட்டி ஒளியூட்டி
எம்மை வாழவைத்த தெய்வமே!
ஒன்றல்ல, ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் புன்னகை பூத்த திருவதனம்
அழியாத கோலமாய் எங்கள் ஆன்மாவில் கலந்திருக்கும்.
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (27-05-2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ள எமது உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(45867)(42-24-11-45)

சந்தவளவு,
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் வாகனசாரதி பணி நிலைக்கு வெற்றிடங்கள் உள்ளன. திறமையும் ஆர்வமும் தகைமையும் உடையோர் 06.06.2005 அன்று காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்க வும்.

தகைமைகள்:

★ 40 அகவைக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

★ சகல வாகனங்களையும் ஓட்டுபவராக இருத்தல் வேண்டும்.

★ வாகன அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

ஆளணி நிர்வாகப்பகுதி,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
நடுவப்பணியகம்,
(கந்தசாமி கோயில் அருகில்)
கிளிநொச்சி.

(C/43065) (33-34-16)



## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

## கலை நிலா அரங்கு

(மாதாந்த அரங்க நிகழ்வுகள் - மே. 2005)

காலம் : 27.05.2005 வெள்ளிக்கிழமை(இன்று)
நேரம் : மாலை 7 மணி
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

**நிகழ்ச்சிகள்**

**நுண்கலை நிகழ்வுகள்**
நடனங்கள், வாய்ப்பாட்டு, வீணை
(கவின் கலைகள் பயிலகம், திருமறைக் கலாமன்றம்)

**இசைக் கதம்பம்**
(யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள்)

பிரவேசம் இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 2393

(C/43064) (33-34-16)


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் மாவட்டத் திட்டமிடற் பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருமான திரு.த.ஞானாகரன் அவர்களின் அன்புத் தாயார்.

### தனிநாயகம் பார்வதிப்பிள்ளை

இறைபதமடைந்துள்ளார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(C/43063) (33-34-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்
திருமதி புஸ்பவாணி செல்வராசா அவர்களின் தாயார்

### சின்னம்மா இரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ஊரெழு கணேச வித்தியாசாலை, சுன்னாகம். (C/43066) (33-34-16)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிமுத்து (ஜோர்ஜ்)



மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிமுத்து (ஜோர்ஜ்) அவர்கள் நேற்றுமுன்தினம் (25.05.2005) புதன் கிழமை காலமானார்.

அன்னார் கயித்தானிக்கம்மா (செல்வம்) அவர்களின் அன்புக் கணவரும் தவராஜா (லண்டன்), கவிதா, தயா, தனேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் செறீன் (லண்டன்), யூட், மலர் ஆகியோரின் மாமனாரும் ராசா (காலஞ்சென்ற), சவரிமுத்து, கிருபைராஜா, இரத்தினம், மரியறோஸ் (கனடா), கருணாகரன் (லண்டன்), ஞானமலர் (டென்மார்க்), யோகராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குணராசா, றஞ்சிதம், பஞ்சவர்ணம், கமலா, மலர், மரியதாஸ் (கனடா), ஜெயமலர் (லண்டன்), ஜெயபாலன் (டென்மார்க்), டொறின் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் புஸ்பராசா, ஜெயந்தி ஆகியோரின் சகலனும் மெலான், ஜெனிஸ்ரன், அனிஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிப்பயணத் திருப்பலி நாளை (28.05.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

மாரீசன்கூடல்,
இளவாலை. (45883) (33-34-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## எழுத்தாக்கல் போட்டிகள் நாளை நடைபெறும்

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழித் திறன் எழுத்தாக்கல் போட்டிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

வலய ரீதியாக நடைபெற்ற எழுத்தாக்கல் போட்டிகளில் முதலாமிடம் பெற்ற மாணவர்களைப் பின்வரும் நிலையங்களில் குறிப்பிட்ட நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழி இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ந. அனந்தராஜ் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்ட மாணவர்கள் - யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் - கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் - மாங்குளம் மகாவித்தியாலயத்திலும். வவுனியா மாவட்ட மாணவர்கள் - வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் - கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் மட்டக்களப்பு மாவட்ட மாணவர்கள் - வின்சன்ற் மகளிர் கல்லூரியிலும் கல்முனை மாவட்ட மாணவர்கள் - வெஸ்லிக் கல்லூரியிலும் உரிய நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

## திக்கம் வடிசாலை ஊழியர் வேலைமறுப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம்,மே27

இரண்டாயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படாததைக் கண்டித்து திக்கம் வடிசாலை ஊழியர்கள் இன்றுமுதல் வேலைமறுப்புப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

அரச வர்த்தமானி அறிவித்தலின்படி தமக்கு வழங்கப்படவேண்டிய அதிகரித்த சம்பளக் கொடுப்பனவை வழங்க இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் -

இதனையடுத்தே இந்த வேலைமறுப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதாக திக்கம் வடிசாலை ஊழியர் சங்கத்தின் தலைவர் செ.குணானந்தம், செயலாளர் செ. யோகேஸ்வரன் ஆகியோர் இணைந்து வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ)


**C/MATHS**

A/L2006
சார்பு வேகம்
சிக்கல் எண்கள்
sat.,sun. 5.00-6.30 P.m.

A/L2007
அட்சர கணிதம்
எறியம் sat.,sun.
3.30-5.00 P.m.

M.Rajan (B.sc.)

SHAMROCK
J/EACHCHAMODDAI RD.

(45875)


## விசாகப் பொங்கல்

புத்தூர் கிழக்கு விரவாணி, நாச்சிமார் கோயில் விசாகப் பொங்கல் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (த)


**திருமணக்கார்**

குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P.: 0777 283795 (C-42899)

**தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான வர்த்தக நிறுவனத்திற்கு எழுதுவினைஞர் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் ஆங்கில அறிவுடையவர் விரும்பத்தக்கது.

விள.இல. 2602 மே/பா உதயன்
யாழ்ப்பாணம். (45878) (33-34-16)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த

சித்தன்

காட்சி நேரம்: 10.30 a.m., 2.30.p.m., 6.30 p.m., 9.30 p.m.

**ராஜா** யாழ்ப்பாணம்.

புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி.

சூர்யா (ரீல்ஸ்)

ஆக்ஷன் படம்.

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

அறிந்தும் அறியாமலும் (ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



சந்திரமுகி (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1961 — 10 — 02



ஆண்டவன் அடியில் 1996 — 06 — 05

### நடராஜா சேகர்

திதி: 27.05.2005

ஐப்பசித் திங்கள் அவதரித்த
அன்பான குடும்பத் தலைவரே
எத்தனை திங்கள் சென்றாலும்
இத்தரணியில் இருக்கும்வரை மறவோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
- குடும்பத்தவர்.

(45880) (33-34-16)

## பதினெட்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 03 - 04 - 1930



மறைவு 27 - 05 - 1987

### அருளம்பலம் முத்துராஜா

(முன்னாள் உப தபாலதிபர் – தொண்டைமானாறு)

கண்ணுக்குள் மறையவில்லை உங்கள் முகம்
நெஞ்சை விட்டகலவில்லை உங்கள் நினைவு
பதினென் ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டகலா

காளிகோயிலடி,
கெருடாவில்,
தொண்டைமானாறு. (C/43062) (33-34-16)

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமகள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி மேரி தியோஜினி சூசைதாஸ்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி மேரி தியோஜினி சூசைதாஸ் காலமானார்.

அன்னார் சூசைதாஸ் - றெஜினா வண்ணமலர் ஆகியோரின் அருந்தவப் புதல்வியும் சாள்ரன் கெஸ்ரன், போல்ரன் கெஸ்ரன் ஆகியோரின் அன்புத் தங்கையும் திருச்செல்வம் காலஞ்சென்ற அன்னறட்ணம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2005) வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (45879) (33-34-16)

தகவல்:
நற்குணம், வண்ணமலர்.

### திருமதி செல்லப்பா செல்லம்மா



கப்புதூவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பா செல்லம்மா அவர்கள் நேற்று (26.05.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காலமானார்.

அன்னார் உலகர் செல்லப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் திருப்பதி, நாகராசா, நவரத்தினராசா (கப்பூர்), பாலசுப்பிரமணியம், கந்தசாமி, செல்வராணி, சந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநாவுக்கரசு, இந்திராதேவி, சத்தியவதனி, செல்வராணி, சாந்தி, பாக்கியநாதன், பவானி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கப்புது இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயிலடி,
கப்புது. (45882) (33-34-16)

தகவல்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்.

### திருமதி சின்னம்மா இரத்தினம்

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா இரத்தினம் அவர்கள் கடந்த புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னக்குட்டி - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் கிருஷ்ணராசா (ஆசிரியர்), கலைவாணி (ஆசிரியர்), புஸ்பவாணி (முகாமைத்துவ உதவியாளர்), கிருஷ்ணபவான் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவமணி, கெங்காதரன், செல்வராசா, பவானி ஆகியோரது அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (26.05.2005) வியாழக்கிழமை நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

வங்கி வீதி,
சுன்னாகம். (45881) (33-34-16)

தகவல்:
இ.கிருஷ்ணராசா (மகன்).

# வியாழன் முதல் அரசுக்கு எதிராக ஐ.தே.க. ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம்

## ஆட்சியாளர்களை ஆட்டங்காண வைக்கும் ஏற்பாடாம்!

கொழும்பு.மே 27

அடுத்த வியாழக்கிழமை முதல் அரசுக்கு எதிரான ஆர்பாட்டங்களையும், பொதுக்கூட்டங்களையும் நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கு ஐ.தே.கட்சி திட்டமிட்டுள்ளது.

அன்றைய தினம் மாத்தறை தெவுன்துறையில் இருந்து பாதயாத்திரை ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டங்கள் மூலம் அரசை வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையைத் தாங்கள் ஆரம்பித்துள்ளனர் என ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் ஐ.தே.க. நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது-

எதிர்வரும் வியாழக்கிழமை மாத்தறை தெவுன்துறையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ள பாதயாத்திரை பதினொரு நாள்களின் பின்னர் கொழும்பை வந்தடையும். இந்தப் பாதயாத்திரையில் லட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றுவார்கள். இறுதியாக கொழும்பில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்துடன் அரசை ஆட்டங்காணச் செய்வோம்.

அன்றாட ஜீவனோபாயத்துக்கு மக்கள் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் அதற்கான எந்தத் தீர்வையும் இந்த அரசு முன்வைக்கவில்லை. மாறாக வேறு விடயங்களைக் கூறி மக்களின் கவனத்தைத் திசை திருப்பி வருகிறது அரசு.

மக்களுக்கு அரசு கொடுத்த வாக்குறுதிகள் காற்றோடு காற்றாகப் பறக்கவிடப்பட்டுள்ளன.

ஜப்பானிய விசேட தூதுவர் இலங்கைக்கு வந்தபோதெல்லாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஜே.வி.பியினர் இன்று ஜப்பானுக்குச் சென்று ஜப்பானின் விருந்தினர்களாக அங்குள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருக்கின்றனர். டோக்கியோ உடன்பாட்டில் சிறு மாற்றம் வந்தால் போதும் என்று இப்போது கூறுகிறார்கள். இது தான் இன்றைய யதார்த்த நிலை.

ஜே.வி.பி. இதுவரைத் தனது தொழிற்சங்க நடவடிக்கைகளில் கடுமையாகச் செயற்பட்ட லால்காந்தவை ஜனாதிபதியைத் திருப்திப்படுத்துவதற்கான தொழிற்சங்கத் தலைமைப் பொறுப்பிலிருந்து தூக்கியெறிந்திருக்கிறது.

ஜே.வி.பி. அப்படி நடந்து கொண்டாலும் ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்குமான உறவில் பாரிய விரிசல் நிலை தோன்றியிருக்கிறது என்பதே உண்மை - என்றார் அவர். (எ - க)

**திருமலையில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டங்களில் இருந்து பாதுகாப்புப் படையினர் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேர் திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்டு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டள்ளனர். திருகோணமலை நகரில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் மத்திய பகுதியில் பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கைசற்றுக்குறைக்கப்பட்டுள்ளபோதும், திருகோணமலை கடற்படைத்தள வீதி, கண்டி வீதி, அபயபுர, நாலாங்கட்டை, மிகுந்தபுரம், மணிக்கூண்டுக் கோபுரச்சந்தியிலிருந்து கோணேஸ்வர ஆலயத்திற்குச் செல்லும் வீதி, மத்திய வீதி, ஏகாம்பரம் வீதி போன்ற வீதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடந்த நாள்களை போல் தொடர்ந்தும் தீவிரமாகப் பேணப்பட்டுவருகின்றன. திருகோணமலை நகரப் பாதுகாப்பில் கடற்படையினரே கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று ஹர்த்தால் எதுவும் இல்லாதபோதும் நகர மக்கள் மத்தியில் அசாதாரண பதற்றம் தொடர்ந்து நீடித்தது. பெரும்பாலான நகரப் பாடசாலைகள் இயங்கியபோதும் மாணவர்களது வரவு குறைவாகவே காணப்பட்டது. நீண்ட நாள் விடுமுறையின் பின்னர் பெரும்பாலான ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சமுகமளித்திருந்தனர்.

அரச அலுவலகங்கள், வங்கிகள், மாகாணத் திணைக்களங்கள் இயங்கின.

ஹர்த்தாலாலும் அதைத் தொடர்ந்து தொழிலுக்கு செல்லமுடியாத கஷ்டத்தினாலும் அவதிப்பட்ட பொதுமக்கள் நேற்றும்அதற்குமுன் தினமும் தம்மிடம் உள்ள நகைகளை வங்கிகளில் அடகு வைத்துப்பணத்தை பெற்றுக்கொள்வதைக் காண முடிந்தது.

திருகோணமலை நகரப்பகுதியில் உள்ள அனைத்து வங்கிகளிலும் உள்ள அடகுபிடிக்கும்பகுதிகளில்பெரும்எண்ணிக்கையான மக்கள் வரிசையில் நின்றதை நேற்று அவதானிக்க முடிந்தது.

(எ-க)

IIS

பிற்போடப்பட்டுள்ளது

Middlesex
பல்கலைக்கழகத்தினரின்
ஏற்பாட்டில
IIS City Campus இல்
எதிர்வரும் 29.05.2005
அன்று நடைபெறவிருந்த
வழிகாட்டல் கருத்தரங்கு
தவிர்க்கமுடியாத
காரணத்தினால்
பிற்போடப்பட்டுள்ளது
என்பதை
அறியத்தருகின்றோம்.
நடைபெறும் திகதி
பின்னர் அறிவிக்கப்படும்.

Director
IIS City Campus,
# 181, Navalar Road,
Jaffna.

யூனிவேசல்
(அரசடி வீதி)
(இந்து மகளிர் கல்லூரி)
LOGIC
A/L 2007
(sat., sun.)
8.00 A.m.
B.y.P.கமல்
(45884)

**பொதுக்கட்டமைப்பு...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகுதியில் ஏற்படலாம் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

அந்த எதிர்பார்ப்போடு இம்மாத இறுதியில் நோர்வே அனுசரணைத் தரப்பின் சார்பில் அந்நாட்டுப்பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் இலங்கை வரவிருந்தார்.

ஆனால், அரசியல் நகர்வுகளில் தேக்கநிலை ஏற்பட்டு, நிலைமை இறுக்கமடைந்துள்ளதால் அவரும் தமது வருகையை மீளவும் தள்ளிப் போட்டுவிட்டார்.

அவரது வருகை தள்ளிப்போடப்பட்டிருப்பது குறித்து எமக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனி அவர் எப்போது வருவார், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான முன்நகர்வுகள் எப்போது ஏற்படும் என்பதெல்லாம் இப்போது கூறக்கூடிய விடயங்கள் அல்ல.

அமைதி முயற்சிகள் தொடர்பாக தென்னிலங்கையில் அரசுத் தலைவி திடமாக ஒரு முடிவு எடுத்து - வெறும் வாயால் அதை அறிவித்துக் கொண்டிருப்பதை விடுத்து - செயலில் அதைக் காட்ட முன்வந்தால்தான் பொதுக்கட்டமைப்பு உட்பட எந்த நகர்வுக்கும் இனிமேல் வாய்ப்புண்டு. ஆனால், அதற்கான சாத்தியங்கள் அண்மைக் காலத்தில் இருக்கின்றமாதிரியாக எமக்குத் தெரியவில்லை - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-க)

**ஈழத்தமிழ்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டினார். ஈழ அகதிகள் திரும்புவதற்கு பாதுகாப்பான ஏற்பாடுகள் இல்லாததால், தம்பாட்டில் நாடு திரும்பும் அகதிகள் மரணத்தை எதிர்கொள்ளவண்டி இருக்கிறார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈழ அகதிகளின் நிலைமை தொடர்பாகத் தமிழ்ச்செல்வன் ஏற்கனவே எழுதிய கடிதம் குறித்துப் பிரஸ்தாபித்த இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ராஜீவ் கபூர், இது விடயமாகப் தான் ஏற்கனவே இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் எனவும் புதுடில்லியில் உள்ள தமது அமைப்பின் பிரதிநிதி இது குறித்து இந்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளார் எனவும் சொன்னார்.

திருகோணமலை நிலைமை குறித்து இச்சந்திப்பில் கவலை தெரிவித்த கபூர், இந்நிலைமை சமாதானச் சூழலைப் பாதிப்பதோடு திருகோணமலையில் தமது அமைப்பு சுயாதீனமாகப் பல இடங்களுக்கும் சென்று தன் பணியை செய்வதையும் இது பாதிக்கும் என்றார்.

அரசியல் ஸ்திரத்தன்மையும், அமைதியும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முக்கியமானவை. சம்பந்தப்பட்ட தரப்புகள் அதிகளவு சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்து சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் - என்றார் அவர்.

ஐ.நா. அகதிகள் தூதரகம் நெருக்கடியான நிலையில் ஆற்றிய பணிகளுக்கு நன்றி தெரிவித்த தமிழ்ச்செல்வன், உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் மக்களின் வளமான தாயகப் பூமி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதையும், அதனால் இடம்பெயர்ந்த மக்கள் அனுபவிக்கும் அவலங்களையும் ஐ.நா. அகதிகள் தூதரகப் பிரதி நிதியிடம் எடுத்துரைத்தார். (எ)

# சூரியமூர்த்தி கொலைக்கு உரிமை கோருகிறது 'தமிழ்த் தேசியப் படை'

கொழும்பு.மே27

புலிகளின் உளவாளியாக சூரியமூர்த்தி செயற்பட்டதால் அவரைக் கொலைசெய்தோம் என்று 'தமிழ்த் தேசியப் படை' எனும் அமைப்பு உரிமைகோரியிருக்கிறது.

பண்டிவிரிச்சான், வவுனியா, தமிழீழம் என முகவரியிடப்பட்டு சேரன் என்பவரால் ஒப்பமிடப்பட்டு இது தொடர்பான ஊடக அறிக்கை நேற்று பத்திரிகையாளர்களுக்கு பக்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது.

'வன்னிப் புலிகளின் உளவாளி சூரியமூர்த்தி கொலைக்கு உரிமைகோருகின்றோம்' - என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்தவாரம் திருமலையில் வைத்து எமது தாக்குதல் படைத்தளபதி நீகசீலன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த, முன்னாள் திருமலை நகரபிதாவும், வன்னிப் புலிகளின் உளவாளியுமான பெ.சூரியமூர்த்தியின் கொலை எம்மால் மேற்கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெ.சூரியமூர்த்தி நீண்ட அரசியல் வரலாற்றை உடையவர். வன்னிப் புலிகளின் அடிவருடிகளாகத் தொழிற்படும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்டவர். இதன் மூலம் வன்னிப் புலிகளின் ஒற்றனாகச் செயற்பட்டு வந்தார். எமது மூத்த அரசியல் தலைவர் றங்கப்பாவின் கொலைக்கு வன்னிப் புலிகளின் உளவாளியாக இவர் செயற்பட்டுவந்தார்.

எமது தாக்குதல் படையணியின் தளபதிகளைக் கொலைசெய்வதற்கு இவரால் வன்னிப் புலிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. ஆரம்பகாலங்களில் வன்னிப் புலிகளின் எதிரியாகத் தன்னை இனங்காட்டிவந்த இவர், கடந்த காலத்தில் வன்னிப் புலிகளின் ஒற்றனாகச் செயற்பட்டுவந்துள்ளார்.

வன்னிப் புலிகளுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்தமை எம்மால் உறுதியாக இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இவருக்கான தண்டனையை எமது தாக்குதல் படைத்தளபதி நீகசீலன் வழங்கியிருந்தார். வன்னி மண்ணைத் தமது தாயகமாகக்கொண்ட இவரைப் போன்ற ஒற்றர்கள் எமது மண்ணில் நிலைக்கொண்டு வன்னிப் புலிகளின் ஒற்றர்களாகச் செயற்படுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

எமது தாயகப் பகுதியில் வன்னிப் புலிகளின் உளவாளிகளைக் களையெடுக்கும் கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். வன்னிப் புலிகளால் எமது சகாக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள் இதன் மூலம் எம்மை ஒடுக்கிவிடமுடியும் என்று கருதுவது நகைப்புக்கிடமானது. வன்னிப் புலிகளுக்கு எவர் ஒற்றராகச் செயற்பட்டாலும் எங்களது தாயக மண்ணிலிருந்து களையெடுக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்றுள்ளது.

இந்த அமைப்பின் ஈ-மெயில் விலாசம் tamilnationalforce@yahoo.dk எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-க)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிரான பிரேரணை சப்ரகமுவ மாகாணசபையில் நேற்றுத் தோல்வி

கொழும்பு.மே 27

பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு ரத்துச் செய்யப்படவேண்டும் என ஜே.வி.பி.சப்ரகமுவ மாகாணத்தில் கொண்டுவந்த பிரேரணை எட்டு வாக்குகளால் தோல்வியுற்றது.

மாகாணசபையின் நேற்றைய அமர்விலேயே பொதுக்கட்டமைப்புக்கு எதிரான பிரேரணை ஜே.வி.பியால் கொண்டுவரப்பட்டது.

ஜே.வி.பியுடன் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளியான சுதந்திரக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் நேற்று அந்தப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன.

ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் நான்கு பேரும், வாக்களிப்பில் பங்குகொள்ளவில்லை.

புலிகளுடனான பொதுக்கட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினுடையது அல்ல அது ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டது. இதனை ரத்துச்செய்ய வேண்டும் எனத் தெரிவித்தே சப்ரகமுவ மாகாணசபையில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் இந்தப்பிரேரணையைக் கொண்டு வந்திருந்தனர். (எ-க)



திருமலை நிலைவரம் குறித்து திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது...

# பிக்குகள் சங்க அனுமதியின்றி புத்தர் சிலை வைக்கப்பட்டதாம்

கொழும்பு.மே27

திருகோணமலை பௌத்த பிக்குகள் சங்கச் செயலாளர் வண.இந்திர தேரர் நேற்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனை மூதூரில் சந்தித்தார்.

வன்முறையற்ற சமாதானத்துக்கான அணியின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு நேற்று முற்பகல் நடைபெற்றது.

இதில் தமது அனுமதியில்லாமல் புத்தர் சிலை வைக்கப்பட்டது என்று எழிலனிடம் வண. இந்திர தேரர் தெரிவித்தார்.

தமது அமைப்பிடம் புத்தர் சிலை வைக்க முதலில் அனுமதி பெறப்படவேண்டும் எனவும், தமது கட்டுப்பாட்டின் படியே அது வைக்கப்பட்ட வேண்டும் என்றும் உள்ள நடைமுறைகளுக்கு மாறாக இரு பிக்குகளின் தனிப்பட்ட முடிவிலேயே இந்தச் சிலை வைக்கப்பட்டது என்றும், அதனை அகற்ற 3 நாள்கள் கால அவகாசத்தைத் தமது அமைப்பு அவர்களுக்கு வழங்கியுள்ளது என்றும் அவர் அப்போது தெரிவித்தார்.

இந்தப் புத்தர் சிலை வைப்பு தமது அமைப்புக்கு உடன்பட்ட விடயமல்ல என்றும் அவர் எழிலனிடம் தெரிவித்தார். (எ)

**உளவுப்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும், கப்டன் நிலாம் இந்தோனேஷியா விலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது போன்று மேலும் பலர் புதிய நியமனங்களைப் பெறவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டில் புலிகளின் இலக்கிலிருந்து அவர்களை விடுவிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-க)

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.